
பக்கங்கள் 24

# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

புதுமை : 03 | 04 ஓகஸ்ட் 2018 | விதி : 112

# புதைந்து போகும் மர்மங்கள்






## வடக்கு மாகாண சபையும் அதிகாரங்களும்



## நுகரும் தன்மையை இழக்கும் மீன்கள்



## பாழாய்ப் போன வாள்வெட்டும் இளைஞர்களும்



## சரசாலை

'யாதும் ஊரே யாவரும் கேளிர்!!'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிவப்பதிகாரம்', 'தடையற தாக்க', 'குசேலன்' படங்களில் நடித்தவர் மம்தா மோகன்தாஸ்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மீண்டவர் இப்போது படங்களில் நடித்து வருகிறார். அமெரிக்காவில் வசிக்கும் அவர் படப்பிடிப்புக்காக இந்தியா சென்று திரும்புகிறார்.

மலையாள திரைத்துறைகுறித்து பலரும் கருத்துக்கள் கூறினாலும் அவர் எந்தக் கருத்தும் கூறுவதில்லை. இதனால் சக நடிகைகள் அவரை சுயநலவாதி எனச் சாடியுள்ளனர். ஆனால் அவர் "எனது பணியை மட்டுமே நான் கவனிப்பேன் வேறு எதிலும் ஈடுபடமாட்டேன்" எனக் கூறியிருக்கிறார்.



மலையாளத்தில் பட வாய்ப்புகள் இன்றி சின்னத்திரை பக்கம் சென்றார் ஸ்ரீதா சிவதாஸ். சந்தானத்துடன் இவர் நடித்த தில்லுக்கு துட்டு படத்தின் இரண்டாம் பாகம் இப்போது தயாராகிறது. இதன் மூலம் சினிமாவுக்கு மீண்டும் வருகிறார்.

'கடை
'தேவ்' ப
50 கே
இந்தப்
சிங் நடி
தற்போ
சென்று
திட்டம்

விஜயின் சர்கார் படத்தில் அனைத்துப் பாடல்களையும் பாடலாசிரியர் விஜய் எழுதியுள்ளார்.

தீபாவளிக்கு வெளியிடத் திட்டமிட்டுள்ள இந்தப் படத்தின் படப்பிடிப்புக்கா படக்குழு அமெரிக்கா செல்லவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 04 ஓகஸ்ட் 2018 | விதி : 112


# தமிழ் மக்கள் என்மீது நம்பிக்கையிழக்கமாட்டார்கள்

கொழும்பு ஷங்கரில்லா ஹோட்டலில் சீனத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்படட சீன தேசிய இராணுவ விழாவில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் அங்கு மஹிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருடன் ஒரு நீண்ட நேர பேச்சுவார்தை இட்ம்பெற்றது. அதில் இலங்கைக்கான சீனத் தூதுவரும் கலந்துகொண்டார் இச்சந்திப்புக் காரணமாக தன்மீது தமிழ்மக்கள் நம்பிக்கையிழக்கப் போர்வதில்லையெனத் திருமலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் சம்பந்தன் தெரிவித்துள்ளார். மேலும் இச்சந்திப்பில் ராஜபக்ஷ சகோதரர்களிடம் இச்சந்திப்பின் போது புதிய அரசியலமைப்பு உருவாக்குவதற்காக அவர்களின் ஆதரவைக் கோரியதாகவும் அவர்கள் அதைச் சாதகமான முறையில் பரிசீலிப்பதாகத் தெரிவித்தனர் என சம்பந்தன் கூறியிருந்தார்.

ஏற்கனவே வெகுவிரைவில் சம்பந்தனுக்கும் மஹிந்தவுக்கும் இடையே பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன எனத் தெரிவித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினரும் மஹிந்தவின் குடும்ப நண்பருமான எம்.ஏ.சுமந்திரன் இதில் கலந்துகொண்டதாகத் தெரியவில்லை.

புதிய அரசியலமைப்புத் தொடர்பாக தாங்கள் சாதகமாகப் பரிசீலிக்கப்போவதாக வாக்குறுதியளித்த ராஜபக்ஷ சகோதரர்களால் தலைமை தாங்கப்படும் பொது எதிர்க்கட்சிகளின் கூட்டணி அடுத்த நாளிலேயே ஒரு புதிய அறிவித்தலை வெளியிட்டது. அதாவது புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதைத் தடுக்க இரு குழுக்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் சட்ட நடவடிக்கை எடுக்க ஒரு குழுவும் தமது நோக்கத்துக்கு ஆதரவு திரட்ட கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்த இன்னொரு குழுவும் அவையாகும்.


இந்த நிலையில்தான் சம்பந்தன் தமிழ் மக்கள் தன்மீது நம்பிக்கை இழக்கமாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றங்களில் ஈ.பி.டி.பியுடன் சேர்ந்த ஆட்சி அமைத்துள்ளபோதும் கூட அவர் தமிழ்மக்கள் தன்னில் நம்பிக்கை இழக்கமாட்டார்கள் எனக் கருதியிருக்கலாம். ஆனால் சீனத் தூதரகம் இவர்களைப் பேச வைத்தமையை ஒரு சாதாரண விடயமாகக் கருதிவிட முடியாது.



**சோழியன் குடும்மி சும்மா ஆடாது**

## மடு தேவாலய வளாகம் புனித பிரதேசமாக்கப்படும்


மன்னார் மடு தேவாலய வளாகப் பிரதேசம் புனித பூமியாகப் பிரகடப்படுத்தப்படவுள்ளதாக இலங்கையின் அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்த அறிவித்தல் உள்நோக்கம் வேறு எதுவுமில்லாத நேர்மையான அறிவித்தல் என்றால் கத்தோலிக்க மக்கள் மட்டுமன்றி ஏனைய சகல மத மக்களும் மகிழ்ச்சியடைவார்கள் மடு மாதா திருத்தலம் கிறிஸ்தவ மக்களுக்கு மட்டுமன்றி இந்து சமய மக்களும் வழிபாடாற்றும் ஆலயமாக விளங்கி வருகிறது.



ஏற்கனவே மடு வளாகம் மடு தேவாலய நிர்வாகத்தினரால் புனித பிரதேசமாகவே பேணப்பட்டு வந்தது. அங்கு எவ்வித சட்டவிரோத காரியங்களோ ஒழுங்கீனங்களோ அனுமதிக்கப் படுவதில்லை. மது, புகைத்தல் என்பன தவிர்க்கப் பட்டுள்ளதுடன் ஒலிபெருக்கி பாவித்தல், வானொலி கேட்டல் எனபன கூட அனுமதிக்கப்படுவதில்லை. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோதும் இந்த ஒழுங்கு பேணப்பட்டுவந்தது. அவர்களின் பிரசார நடவடிக்கைகள் கூட அங்கு அனுமதிக்கப்படவில்லை.

இப்படியான நிலையில் ஏன் இந்த அமைச்சரவைத் தீர்மானம் என்ற கேள்வி எழவே செய்கிறது. மடு வீதியில் உள்ள சிங்களவர்களுக்கென ஒரு விகாரையை அமைத்து பின் அதையும் புனித பிரதேசமாகும் உள்நோக்கம் உண்டோ என்ற சந்தேகமும் எழுகிறது.

## போதைப்பொருள் பாவனையில் இலங்கை உலக சாதனை



உலகில் தடைசெய்யப்பட்ட 16 கொடிய போதைப் பொருள்கள் பாவனையில் உள்ளன எனவும் இவற்றில் 14 இலங்கைளில் சர்வசாதாரணமாக பெறக்கூடியதாக உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இந்த வர்த்தகத்தின் மூலம் கோடிக்கணக்கான பணம் புரள்வதாகவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி போதையற்ற நாடு ஒன்றை உருவாக்கப்போவதாக பிரகடனம் செய்துள்ளார். அதுமட்டுமின்றி மீண்டும் மீண்டும் போதை வஸ்துக் குற்றங்களில் ஈடுபடுவோரை தூக்கில் போடவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஆனாலும் போதைவஸ்து வர்த்தகம் தங்கு தடையின்றி இடம்பெற்று வருகிறது. நாளாந்தம் போதை தொடர்பான குற்றம் ஒன்றாவது இடம்பெறுகின்றது. சிறைச்சாலைகள் கூட போதைப் பொருள் விநியோக மத்திய நிலையங்களாகச் செயற்பட்டு வருகின்றன.


ஏற்கனவே காரணமற்ற கைதுகள், படுகொலைகள், சித்திரவதைகள் கடத்தப்பட்டு காணாமற்போதல் விசாணையின்றி நீண்டகாலம் தடுத்து வைத்தல் எனப் பல மனித நேய விரோத நடவடிக்கைகளில் சாதனை படைத்த இலங்கை போதைவஸ்து பாவனையிலும் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**காப்பாற்றச் சிலபேர் இருந்துவிட்டால் கள்வர்கள் வாழ்விலும் நியாயம் உண்டு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்

கல்யாணம் பண்றதும் செல்போன் வாங்குறதும் ஒன்னு... ரெண்டுமே கொஞ்சம் வெயிட் பண்ணியிருந்தா





நல்ல மாடல் கிடைச்சிருக்குமேன்னு பீல் பண்ண வைக்கும்..!






தம்பிகளா அண்ண சொல்றது... கருணாநிதியின் உடல் நிலையை குறித்து தான் தவறாக பதிவிட வேண்டாம் என்று சொல்லிருக்கார்.. மற்றபடி நாம் கருணாநிதி தமிழினத்துக்கு செய்த துரோகத்தை பற்றி நாகரீகமாக பதிவிடுவோம் 😘😘

பையன் வரான்னு பிடிச்சத சமைச்சு வைக்குற அம்மாவும்...




எனக்கு போதும் அவனுக்கு வைன்னு சொல்ற அப்பாவும் இருந்தா அவன் தான் பணக்காரன் 😊

திருமணம் முடிந்து மணப் பெண் மாப்பிள்ளை வீட்டிற்கு செல்ல தயாராகி கண்களில் கண்ணீருடன் புறப்படுகிறாள் அப்போது அதை பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிறுவன் அவன் தந்தையிடம் கேட்கிறான்.. 😂😂😂


மகன் : அப்பா... ஏன் அந்த கல்யாணப் பெண் அழுகிறாள்?

அப்பா : ஏன் என்றால் அவள் தனது பெற்றோரைப் பிரிந்து ஒரு புது இடத்திற்கு செல்கிறாள்.. 😭😭😭

மகன் : அப்போ அந்த மணமகன் ஏன் அழவில்லை? 😢😢

அப்பா : அவன் நாளைல இருந்து தினமும் அழுவான்!!! 😂

இடையை காட்டுபவளும் தொடையை காட்டுபவளும் நாயகி அல்ல.




நாட்டுக்காக அவளின் வீரத்தை காட்டுபவள் தான் உண்மையான நாயகி...!!

ஸ்டாலின் : அப்பா டெல்லியில இருந்து ராகுல் காந்தி வந்திருக்காரு.




கலைஞர் : மூனு தொகுதிக்கு மேல இல்லைன்னு சொல்லி அனுப்பீரு

கோபம் வரும் போது வாயை மூடிக்கொள்!! குழப்பம் வரும் போது கண்களை மூடிக் கொள்...





தோல்வி வரும் போது காதுகளை மூடிக்கொள் வெற்றி வரும் போது மனதை மூடிக்கொள்..!

இந்த உலகத்தில் என்னையும் ஒரு மனிதனாக மதித்து




பொன்னாடை போர்த்தும் ஒரே நபர்... சலூன் கடைக்காரன் மட்டுமே...

இந்த உலகில் எதிரிகளால் தோற்றவர்களை விட,




துரோகிகளால் தோற்றவர்களே அதிகம்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

# இதயம் காப்போம் உயிர் வளர்ப்போம்

'இலங்கையில் தினமும் 250 பேர் தொற்றா நோய்களால் உயிரிழக்கின்றனர். இதில் 150 பேர் இதய நோய் காரணமாக மரணிக்கின்றனர்" என அதிர்ச்சித் தகவலை வெளிப்படுத்தியுள்ளார் காலி வைத்தியசாலையின் இதய நோய் வைத்திய நிபுணர் நாமல் கமகே. இவரின் இந்தக் கருத்தை நாம் சாதாரணமாகக் கடந்து சென்றுவிட முடியாது. மேலும், 'இதய நோய்க்காக தினமும் 50 தொடக்கம் 60 பேருக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது. ஆனாலும் நாள் ஒன்றில் 12 சத்திர சிகிச்சைகளை அரச, தனியார் வைத்தியசாலைகளில் நடத்தக்கூடியதாக உள்ளது என்று மற்றொரு அதிர்ச்சித் தகவலையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கு மட்டுமல்ல உலகம் முழுவதற்குமே இன்று தொற்றா நோய்கள் பெரும் சவாலாக மாறியிருக்கின்றன. பெரியவர்களை மட்டுமே பாதித்து வந்த இந்தத் தொற்றா நோய்கள் இன்று சிறுவர்களையும் அதிகளவில் பாதிக்கின்றது. பாடசாலை மாணவர்களில் 10 வீதமானவர்கள் நீரிழிவு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்கிறது சுகாதார அமைச்சின் அறிக்கை. சிறுவயதிலேயே இவ்வாறான நோய்களின் தாக்கம் இதயத்தைப் பாதிக்கச் செய்து மிகக் குறைந்த வயதிலேயே அவர்களின் உயிரைப் பறித்து விடுகிறது.

இந்த உயிர் பறிப்புக்கு எமது உணவு முறையில், வாழ்க்கை முறையில் ஏற்பட்ட சடுதியான மாற்றமும் உடலை வருத்தாத வேலை முறைகளுமே காரணம் எனலாம். துரித உணவின் தாக்கத்துக்கு உட்பட்டுள்ள நாம், எமக்கான நேரமின்மை, வேலைப்பளு, பிள்ளைகளின் விருப்பு என்பவற்றைக் காரணம் காட்டி அவர்களுக்கு துரித உணவை ஊட்டி விடுகிறோம். அந்த உணவையே நாமும் உட்கொள்கிறோம். தவிர இன்று பெரும்பாலானவர்கள் உணவகங்களிலேயே தங்கள் உணவை முடித்துக்கொள்கிறார்கள். சுவைக்காகப் பயன்படுத்தும் பொரித்த உணவுகள், தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படும் எண்ணெய் என்பவற்றால் விலையைக் கொடுத்து நோய்களை வாங்கிக் கொள்கிறோம்.

வளர்ந்து விட்ட பொருளாதார உலகுக்குள் சிக்கிக் கொண்டு, அதிசுகத்தை விரும்பி சாதாரண வேலைக்குக்கூட ஆட்களை நாடுகிறோம். விளைவு விபரீதத்தை உருவாக்கி விடுகிறது. பாதுகாப்பற்ற சூழலைக் கருதி வீட்டுக்குள்ளேயே குழந்தைகளை விளையாட வழி செய்து அவர்களைப் பருக்கச் செய்து, 'நொறுக்குத் தீனி' என்ற விஷத்தையும் நாமே அவர்கள் வசம் வழங்கி விடுகிறோம். முடிவு எமது அற்ப நலன்களுக்காகப் பிள்ளைகளின் ஆயுளைப் பாதியிலேயே பறித்து விடுகிறோம். - எமது உயிரையும் இழந்து விடுகிறோம்.

எமது முன்னைய சமூகத்தினர் நல்ல உணவு முறையைக் கைக் கொண்டே ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்தார்கள். நாம் நவநாகரிகம் என்ற போர்வைக்குள் சிக்கி கண்டதையும் தின்று உடல் பருத்து இன்று உயிரையும் இழந்து கொண்டிருக்கிறோம். முன்னைய சமூகத்தைப்போல ஆரோக்கியமான உணவு முறையைப் பின்பற்றி இதயம் காப்போம்: உயிர் வளர்ப்போம்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 13

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

என் கத்தல் சத்தம் குண்டுத் தாக்குதலை நிறுத்தியது போல ஓய்ந்திருந்தது. கதறிக் கொண்டு ஓடும் எனக்கு காயம் ஏதுமோ என நினைத்து இழுத்துப் பிடித்தது ஒரு வலிய கரம். யாரந்த மனிதன் என்று எனக்குத் தெரியாது. அந்த இடத்திலிருந்தவர்கள் 'காயமோ பிள்ளை எனக் கேட்ட போது தான் நான் சுயநினைவு பெற்றேன். அவர்கள் என்னை ஓரிடத்தில் உட்கார வைத்து நிறையத் தண்ணீர் தந்தார்கள்.

நடந்த கதையை அவர்களிடம் கூறினேன். லொறிக்குக் கீழே நிறைய மனிதர்கள் இறந்து கிடப்பதை தெரியப்படுத்தி விட்டு எனது இருப்பிடத்தை நோக்கி நடந்தேன். அரை குறைச் சாப்பாட்டையும் என்னால் சாப்பிட முடியாதிருந்தது.

போட்டிருந்த எனது உடைகள் நாட்கள் கடந்த இரத்தத்தில் பட்டதால் துர்மணத்தைத் தந்தது. ஒரு மறைப்பை உருவாக்கி தெளியாத கலங்கல் தண்ணீரில் குளித்தேன். சவர்க்காரத்தை போட்ட போது என்னை அறியாமலே சிரிப்பு வந்தது. தண்ணீரின் நிறத்துக்கு சவர்க்காரம் அத்தியவசியமா? என்ற நினைவில். ஆனாலும் அது தேகத்தைப் புதுப்பித்த உணர்வைத் தந்தது. உடம்பு காய்ச்சல் காரணமாகக் கொதித்துக் கொண்டிருந்தது. நடக்கவே முடியாத அளவுக்கு தேகத்தை காய்ச்சல் வாட்டி எடுத்தது. அங்கு யாரோ ஒருவரிடம் மண்வெட்டியைப் பெற்று வந்து நான் முன்னர் போட்டிருந்த உடைகளைக் கணவர் புதைத்துக் கொண்டிருந்தார்.

குழந்தை பாலுக்காக வீறிட்டுக் கதறியது. காய்ச்சல் காரணமாக பாலைக் கொடுக்க முடியவில்லை. பிள்ளைக்கும் காய்ச்சல் வந்துவிடும் என்ற காப்புணர்வுதான் காரணமாக இருந்தது. பக்கத்தில் இருந்த வயோதிபத் தாய் குழந்தைக்கு பால்மா கரைக்க உதவியதுடன் 'பிள்ளை சரியாப் பயந்ததாலதான் காய்ச்சல் " எனக் கூறி உப்பும் கரியும் வைத்து துடைத்து வேறொரு பக்கமாக கொண்டு சென்று எறிந்தார். காய்ச்சல் விடவில்லை. தண்ணீர் தேவையாக இருந்ததால் எஞ்சியிருந்த ஒரே ஒரு தண்ணீர்க் கானுடன் கணவர் தண்ணீர் எடுத்து வரப்புறப்பட்டார். பல மணி நேரம் கழித்து தண்ணீருடன் வந்தார்.

குண்டுமழை அன்று மாலை கொட்டுப்படவில்லை. நிம்மதியாக நித்திரை செய்தோம். அதிகாலை குண்டுச் சத்தங்களே சேவலுக்குப் பதிலாக தலைக்கு மேலாக கூவிப் பாய்ந்தன. அடை மழைபோல குண்டு மழை கொட்டிக் கொண்டிருந்தது. நாங்கள் இனித் தப்ப மாட்டம். மனம் தன்னம்பிக்கையை இழந்து கொண்டிருந்தது. மண் தலை முகமெங்கும் புழுதியைப் பூசிக் கொண்டிருந்தது. சுமார் இரண்டு மணித்தியாலங்களாக மாறி மாறி அடித்த குண்டோசை நிறைவுற்றது. [illegible] இழப்பின் துயர அழுகைகளும் நிறைந்திருந்தன. வீதியில் கைவிடப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆயுத எதிர்ப்பு டாங்கிகள், ஆட்லறிகள் பெரும் பெரும் வாகனங்கள் எரிந்து கொண்டிருந்தன.

கொஞ்சம் வீதியோரமாகப் போய் பார்த்த போது உடலங்கள் சிதறிக் கிடந்தன. காயப்பட்டவர்களின் முனகல்களும் தவிப்பும் நெஞ்சைப் பிசைந்தது. பழைய துணிகளைக் கிழித்து முடியுமானவரை ஓரளவு இரத்தம் போகாமல் ஆளும் பேருமாக காயத்துக்கு கட்டு மட்டுமே போட முடிந்தது. என்னால் நிற்க முடியாத அளவு காய்ச்சல் வாட்டியது. கணவரும் நானும் பதுங்குகுழி வீட்டை அடைந்தோம். கலங்கல் நீரில் கால் முகத்தைக் கழுவி அந்த வயோதிபத் தாயிடமிருந்து பிள்ளையை வாங்கிக் கொண்டு பதுங்குகுழி கிடங்குக்குள் உறங்கத் தொடங்கினேன்.

பதுங்கு குழிக்குள் தூங்குவது மிகவும் பயத்தைத் தந்த சம்பவமாக விசுவமடு கல்லாறுப் பகுதியில் நடந்த கிபீர் தாக்குதல் விளங்கியது. 2008 நவம்பர் மாத இறுதிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்த நேரமது. இரண்டு தரப்பு போர்க்கள வீரர்களும் ஓய்வாகியது இதயத்தை ஆசுவாசப் படுத்திய அமைதிப் பொழுது... விழிகள் மனமுவந்து உறக்கத்தைத் தழுவிய அந்தப் பொழுது... மழைத்தூறல்கள் சாரலாக கூரைமீது விழும் ஓசையின் தாலாட்டில் கண்களை மூடிய ஒரு பொழுதது. இடி மின்னல் காரணமாக விமானங்கள் வராது என நினைத்து உறங்கிப் போனேன்.

சிறிதளவு நேர உறக்கத்தை கலைத்தது கிபீர் விமானங்களின் சத்தம். தினமும் கேட்ட சத்தத்தின் பிரதிபலிப்பால் வந்த உறக்கக் கலைப்பென ஐயப்பட்டபோதும். அது ஐயமில்லை. நிஜமாகவே கிபீர் விமானங்களின் செவிப்பறையை கிழித்தெழும் ஓசை என்பதை உணர முடிந்தது. மழை இரைச்சலையும் மீறி உயிரைப் பிழிந்து ஆன்மாவை நடுங்க வைக்கும் பயங்கர இரைச்சல். யாருமே எழுந்து பதுங்கு குழிக்குள் எழுந்தோட விடாத திகில் சத்தம். என்ன செய்வதெனத் தெரியாது உறைந்து சிலையான நிலை.

பதுங்கு குழிக்குள் தலையை மூடுமளவிற்கு வெள்ளம் நிறைந்திருந்தது. அந்த நிலையில் தண்ணீருக்குள் இறங்கினாலும் அதிர்வுகளால் ஆபத்தே. தண்ணீருக்குள் இருந்தால் அதிக உயிரிழப்பு ஏற்படும்.

ஊ...ஊ...ஊ... என்ற இரைச்சல் அதி பயங்கரமாக கேட்டது. நிறைமாதக் கர்ப்பிணியின் வேதனைபோல விமானம் பாரத்தோடு சரியும் சத்தம்... அதனைத் தொடர்ந்து டொம்... டொமார்... என்ற காதுச் சவ்வுகளை கிழித்தெறிந்த ஓசை....

மாறி மாறி சுமார் முப்பது குண்டுகளுக்கு மேலாக போட்ட கிபீர் விமானங்கள் உயிர் குடித்த திருப்தியில் தெற்காக நகர்ந்தது.

இரும்பு வல்லூறுகள்போன பின் அம்புலன்ஸ் வண்டிகள் அவலக் குரலோடு காயப்பட்டவர்களை காவிவர விரைந்தன. (சாட்சியம் நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ யோக நாராயணன்

# வடக்கு மாகாண சபையும் அதிகாரங்களும்



இலங்கை 1948 ஆம் ஆண்டில் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. அதன்படி 'வெஸ்ட்மினிஸ்ரர்ஸ்" முறையிலான பாராளுமன்ற அமைப்பினூடாக நேரடியாக பிரித்தானிய மகாராணியால் செலுத்தப்பட்ட அதிகாரம் டி.எஸ்.சேனநாயக்காவின் தலை மையிலான அமைச்சரவைக்குக் கைமாறியது. என்றாலும்கூட இலங்கை நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் எந்த ஒரு சட்டமும் இலங்கையின் தேசாதிபதி ஒப்பபுதல் வழங்கினாலே அமுலாக்கமுடியும் என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் இலங்கையின் தேசாதிபதி பிரித்தானிய மகாராணியால் இலங்கைப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.

அதாவது இலங்கை சுதந்திரம் பெற்று விட்டதாகக் கூறப்பட்டபோதிலும் அதற்கென நாடாளுமன்றம், அமைச்சரவை என்பன இருந்தபோதிலும் இலங்கை பிரித்தானிய மகாராணியின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இலங்கையின் முப்படைகளின் தளபதிகூட மகா தேசாதிபதியே என்றளவுக்கு அவரின் அதிகாரம் பலப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் 1956 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையில் உருவான சிங்கள தேசிய எழுச்சி காரணமாக அவர் நாட்டின் பிரதமரானார். அவர் தனது அதிகாரத்தையும் மக்கள் ஆதரவையும் பயன்படுத்தி பிரிட்டனின் ஆதிக்கத்திலிருந்து இலங்கையை விடுவிக்கும் முயற்சிகளில் இறங்கினார். அதன் ஒரு கட்டமாக திருகோணமலையில் அமைக்கப்பட்டிருந்த பிரித்தானிய கடற்படைத் தளத்தையும், கட்டுநாயக்காவில் இயங்கிய பிரித்தானிய றோயல் விமானப் படைத்தளத்தையும் நாட்டை விட்டு வெளியேற்றினார். அப்போது தமிழரசுக் கட்சி பிரித்தானியப் படைகளை வெளியேற்ற வேண்டாமெனக் கோரி பிரித்தானிய மகாராணிக்குத் தந்தியடித்து தமது பிரித்தானிய ஏகாதிபத்திய விசுவாசத்தை வெளிப்படுத்தியமையை மறந்துவிட முடியாது.

அவர் தொடர்ந்து இலங்கையை ஒரு சுதந்திர தேசமாக மாற்ற எடுத்த உறுதியான நடவடிக்கைகள் காரணமாக 1959 ஆம் ஆண்டு ஒரு புத்த பிக்குவால் சுட்டுக் கொல்லப்பட்டார். அடுத்து 1970 ஆம் ஆண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த அவரது மனைவியான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 1972 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பை நிறைவேற்றியதன் மூலம் இலங்கையைப் பூரணமாக பிரித்தானியாவிடமிருந்து விடுவித்தார். மகாராணியின் பிரதிநிதியான மகாதேசாதிபதி இல்லாமற் செய்யப்பட்டு நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி முறை அதிகாரத்துக்கு வந்தது.

1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் 1978 இல் கொண்டுவந்து நிறை வேற்றப்பட்ட புதிய அரசிய லமைப்பின் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படும் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஆட்சிமுறை கொண்டு வரப் பட்டு திறந்த பொருளாதாரக் கொள்கை அமுலுக்கு வந்தது. அதன் காரணமாக 1972 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த அரசியலமைப்பின் நலன்கள் யாவும் முற்றாகவே தகர்க் கப்பட்டன.

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு இதுவரை 19 திருத்தங்களைக் கண்டுவிட்டது. தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக தொடர்ந்து நடத்திய போராட்டங்களின் விளைவாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அத்திருத்தம் பெற்ற குழந்தைதான் மாகாண சபை.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் மாகாண சபை ஒரு திருப்திகரமான சட்டம் அல்ல என்பதைத் தமிழ் மக்கள் நன்கு புரிந்து வைத்துள்ள போதிலும் சில நாளாந்தம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளில் ஏதாவது பங்களிப்பை அது வழங்க முடியும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடம் இருந்தது.

பிரித்தானியா இலங்கைக்கு சுதந்திரம் வழங்கியபோது கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புப்போலவே மாகாண சபையும் ஜனாதிபதியின் ஆளுநரின் கட்டுப்பாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட சில அதிகாரங்களுடன் செயற்பட முடியுமெனக் கருதப்பட்டது. எனவே வடக்கு மாகாண சபையின் அதிகாரத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வழங்கினர். எனவே முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சராகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நால்வர் அமைச்சர்களாகவும் பதவியேற்றனர்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இராணுவ அதிகாரி யான மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆளுநராக முழு அதிகாரத்தையும் கையில் வைத்திருந்தார். அதன் காரணமாக நிறைவேற்றப்படாத தீர்மானங்களை விவாதிக்கவும், நிறைவேற்றுவதற்கான ஒரு அமைப்பாகவுமே செயற்பட முடிந்தது. அவரின் மாற்றத் தின் பின்பு நியாயமான மென் போக்குடைய ஒரு நபர் எனக் கருதப்பட்ட றெஜினோல்ட் கூரே ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஆனால் நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

குறிப்பாக இந்த மாகாண சபையின் ஆயுட் காலம் முடிவடையும் தருணத்தை நெருங்கிவிட்ட போதிலும் முதலமைச்சர் நிதியம் அமைப்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. அதாவது சுயமாகப் பொருளாதார நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் முடக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி ஆளுநரின் நடவடிக்கை காரணமாக மாகாண அமைச்சரவையின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபை மீதான ஊழல் மோசடிக் குற்றச்சாட் டுக்கள் காரணமாக முதலமைச்சர் சகல அமைச்சர்களையும் பதவி விலகியிருக்கும்படி கேட்டிருந் தார். அமைச்சர் டெனீஸ்வரன் பதவி விலக மறுத்ததால் அவர் முதலமைச்சரால் பதவி நீக்கப்பட்டார். ஆனால் அதை ஆளுநர் வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யவில்லை. இதன் பலனாக டெனீஸ்வர னைப் பதவி நீக்கியமை செல்லுபடியாகதென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிவிட்டது.

மாகாண சபைக்கு சட்டப்படி நான்கு அமைச்சர்களே! இப்போது ஐந்து அமைச்சர்கள் உள்ள நிலையில் அமைச்சரவை இயங்க முடியாது. அடிப்படையில் மாகாண சபை அமைச்சரவையின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளன.

இப்போதும்கூட ஆளுநர் டெனீஸ்வரன் தொடர்பான பதவி நீக்கத்தை வர்த்தமானி மூலம் அறிவித்தால் பிரச்சினை சுமூகமின்றி தீர்ந்து விடுமெனக் கூறப்படுகின்றது. ஏற்னகவே அறிவிக்கப்பட்டாலும் இப்போது அறிவிக்கப்படாமல் விடப்படுவது மாகாண சபையின் நடவடிக்கைகளை முடக்கும் உள்நோக்கத்துடனேயே மேற்கொள்ளப்படுகின்றதா என்ற கேள்வியும் எழுகிறது.

இவ்வாறு மாகாண அமைச்சரவை முடக்கப்பட்ட நிலையில் ஆளுநர் மக்கள் பிரச்சினைகளில் தானே நேரடியாக இறங்கிக் கருத்துக்கள் கூறும் நிலையும் ஏற்பட்டுள்ளது.


இரணைமடு நீரை யாழ். குடாநாட்டுக்குக் கொண்டு வருவது தொடர்பாக மாகாண சபை நிபுணர் குழுவின் ஆய்வின் அடிப்படையில் சில முடிவுகளை எடுத்துள்ள நிலையில் ஆளுநர் அதற்கு மாறாக யாழ்ப்பாணத்துக்கு இரணைமடு நீரைக் கொண்டு செல்லவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இப்படியாக வட மாகாண சபையை செல்லாக் காசாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வட மாகாண சபையின் அதிகாரம் முடக்கப்படுகின்றது என்றால் முதலமைச்சரினதோ - அமைச்சர்களினதோ - உறுப்பினர்களினதோ அதிகாரம் பறிக்கப்படுவதல்ல. வட மாகாண மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதன் ஒரு வடிவம். இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பவில்லை? ஜனாதிபதியுடன் ஏன் பேசவில்லை? ஆனால் தமிழ் மக்கள் தமக்கு மாகாண சபை மூலம் வழங்கப்பட்ட மிகக் குறைந்த அதிகாரங்கள் கூடப் பறிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நோக்கன்





# பாழாய்ப் போன வாள்வெட்டும் இளைஞர்களும்

கடந்த 29,30,31 ஆம் திகதிகளில் அமளியாக அரங்கேறியுள்ளன வாள்வெட்டுச் சம்பவங்கள். அதுவும் குறிக்கப்பட்ட இரண்டு, மூன்று பிரதேசங்களில் தான் வாள்வெட்டுக் குழு தங்கள் வீரத்தை (?) காட்டியிருக்கிறார்கள். ஆனா்ல் இந்தச் சம்பவங்களால் மக்கள் கிலேசப்பட்டனர் என்பதைக் காணமுடியவில்லை. ஏனெனில் யார் வெட்டுகிறார்கள்? ஏன் வெட்டுகிறார்கள்? என்ற காரணத்தை அறிந்ததே மூல காரணம் எனலாம்.

வாள்வெட்டைப் பொறுத்த வரை அதில் பங்கெடுக்கும் கஞ்சா இளைஞர்கள் தாமாக இயங்கவில்லை. ஆனால் இயக்கப்படுகிறார்கள் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது என்பதே மக்களின் கருத்து.

'அதென்ன எல்லா இடங்களிலும் வீட்டையும், அதிலுள்ள பெறுமதியான பொருட்களையும் அடித்து நொருக்குவது? ஒரு வாள்வெட்டுக் குழுவுக்கு இத்தனை எதிரிகளா? அங்கொன்றும், இங்கொன்றுமாய் ஓடி ஓடித் தாக்குவது. இந்த வாள் வெட்டுக் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் தமது இருப்பை மக்களுக்குத் தெரியப்படுத்த செய்யும் சகஜமாக இருக்கலாம்" என்கிறார் ஒரு கிராமவாசி.

'தமது இருப்பைத் தெரிவிக்க இதையா செய்வது? எத்தனை வேறு விளையாட்டுகள் உண்டு. அவற்றைச் செய்து பெயர் எடுக்கலாமே? ஏன் மற்றவர்களின் பொருட்களைச் சேதப் படுத்துகின்றனர்?" என்கிறார் ஒரு பொதுமகன் ஒருவர்.

இராணுவத் தளபதியின் பேச்சிலிருந்து பின்னோக்கி நகரலாம். 'வட பகுதியிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதற்கு முயற்சித்தால் என் சேவையை இராஜினமா செய்வேன்" என்று அவர் அரசைப் பயமுறுத்தி இருக்கிறார்.

'எனவே பிரச்சினை அடுப்படியில்தானா இருக்கிறதென்று சந்தேகப்பட வைக்கிறது" என்கிறார் எம்மைத் தொடர்பு கொண்ட ஒரு வாசகர்.

வடக்கிலிருந்து இராணுவம் வெளியேறக் கூடாது. தொடர்ந்தும் இருக்க வேண்டிய தேவை இராணுவத்தினருக்கு அவசியமாக இருக்கிறது. இராணுவம் வடக்கில் நிலை கொண்டிருப்பது சிலரின் நலனுக்குத் தேவையாக இருக்கிறது. அது அவர்களின் சொந்த நலன் சார்ந்த விடயமாகக்கூட இருக்கலாம். இதன் மூலம் அவர்கள் எதையோ சாதிக்கிறார்கள். அல்லது சாதிக்க விரும்புகிறார்கள்.

கடந்த ஜூலை 12 யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்ற பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர "தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து இலங்கையின் சமாதானத்தை உருவாக்கிய நாம் இன்று குற்றவாளிகளுடனும், குற்றச் செயல்களுடனும் போராடுகிறோம். அதனையும் அழித்து வெற்றி பெறுவோம்" என்று வீர வசனம் பேசிவிட்டுச் சென்ற அடிகள் மறைய முன் "நீ என்ன சொல்லுறது. எங்களை நீ அடக்குவதா? எங்கள் பின்புலம் யாரென்று அறியாது பேசிவிட்டுச் சென்றிருக்கிறாய். இந்தா செய்து காட்டுகிறோம்" என்றவாறு நுங்கு சீவுவதைப்போல சீவித் தள்ளியிருக்கிறார்கள் வாள்வெட்டு ஜாம்பவான்கள்.

அன்றைய ஊடகச் சந்திப்பில் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர மேலும் கருத்துத் தெரிவிக்கையில் "சட்ட ரீதியற்ற யாருடைய கருத்துக்கும் நான் பதிலளிக்க வேண்டியதில்லை. அதனை நான் நிராகரிக்கிறேன். குற்றச் செயல்கள் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் எங்களால் முடிந்தவரை குற்றங்களைத் தடுக்கவும் அதில் ஈடுபடுகிறவர்களைக் கண்டுபிடிக்கவும் குற்றங்கள் நடைபெறுவதற்கான காரணத்தைக் கண்டறியவும் நாம் முயற்சிப்போம். வடக்கில் தற்போது 6,500 பொலிஸ் அதிகாரிகள் கடமையிலிருக்கின்றனர். அனைவரையும் நாம் ஒன்றிணைக்க வேண்டும்." என்று சொல்லி இருக்கிறார்.

பொலிஸ் மாஅதிபர் இங்குள்ள யதார்த்தத்தை அறியாது பேசுகிறாரா? இல்லாவிடில் அறியாதவர்போல நடிக்கிறாரா? சில தினங்களுக்கு முன்னர் பேசிய ஒரு அரசியல்வாதி, வடக்கில் நடக்கும் குற்றச் செயல்களுக்கும் பொலிஸாருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது எனச் சொல்லி இருக்கிறாரே? அதற்கு பொலிஸ் மா அதிபரின் பதில் என்ன? இதற்கிடையே பழைய கதையாகவிருந்த கிறீஸ் பூதத்திற்குத் திரும்பவும் வால் முளைத்திருக்கிறது. அது அராலிப் பகுதியில் தனது சேட்டையைக் காட்டுவதாக ஊடகங்கள் பூச்சாண்டி காட்டுகிறது. எனவே இங்கு என்ன நடக்கிறது?

வாள்வெட்டும், பூதக்கதையும் ஒரு அரசியல் பின்புலத்தைக் கொண்டது என்பதை ஊரறியும். இதற்குப் பின்னால் ஒரு சமூகத்தைச் சிதைக்கின்ற பணியொன்று முன்னெடுக்கப்படுவதாக அனைவரும் நம்புகின்றனர். குடியையும், கூத்தையும், கொள்ளையடிப்பவர்களின் கூட்டைக் கொண்டு அரசு பின்புலம் இதை இயக்குவதாகப் பலர் கண்டறிந்திருக்கின்றனர்.

புலிகளை அடக்கினோம். கொன்று குவித்தோம் என்று கொக்கரிக்கின்ற பேடுகளே! அப்படியானதொரு கைங்கரியத்தைச் செய்து முடித்தவர்கள் நீங்கள் எனில், வாள்வெட்டுக் கும்பலை அடக்குவதென்பது உங்களுக்குச் சில மணி நேரப் பணியாக இருக்க வேண்டும். ஆனால் புலிகளை நீங்கள் அழிக்கவில்லை, பல நாடுகள் சேர்ந்தே அழித்தன. ஆகவே தான் பூனைகளைப் போன்ற இந்த வாள்வெட்டுக் கும்பலையும் அழிப்பதென்பது உங்களுக்குப் பெரிய விடயமாக இருக்கிறது என நாம் நம்பலாம்.

வடக்கில் ஏதோ ஒரு பயங்கரம் நடக்கிறது என்று உலகத்தை நம்பவைக்க வேண்டும். மக்கள் பீதியுடன் வாழ்கிறார்கள் என்ற மாயையை ஏற்படுத்த வேண்டும். அதனால் மக்களைப் பாதுகாக்க இராணுவம் அங்கே நிரந்தரமாக நிலைகொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்காகவே வாள்வெட்டுக் கும்பலும் உங்களுக்குத் தேவைப்படுகிறது.

வடபகுதி மக்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். வாள்வெட்டு அரசியல் பின்புலத்தைக் கொண்டது. அது சில விஷமிகளின் துணையோடு நடத்தப்படுகிறது. இதில் பங்களிப்புச் செய்கின்ற தமிழ் இளைஞர் கூட்டம் வெறும் அம்புகளே. அவர்களை எய்தவர்கள் தமிழ் சமூகத்தின் அமைதியைக் குலைக்க் வேண்டும் என்று விரும்புகின்ற - சக்திகள் - துரோகிகள். அவர்கள் பாதுகாப்பாக இருந்து கொண்டு இந்தத் தமிழ் இளைஞர்களைப் பலிக்கடா ஆக்குகின்றனர். போதைக்குக் குடி, மயக்கத்திற்குக் கஞ்சா, ஓடியாடித் திரிய புதிய மோட்டார் சைக்கிள்கள். செலவுக்குப் பணம். அந்த இளைஞர்களுக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

வாள்வெட்டுக் குழுவில் அங்கத்துவம் வகிக்கும் இளைஞர்கள் ஒருநாள் அந்த மயக்கத்திலிருந்து விடுபடுவர். அப்போதுதான் அவர்களுக்குத் தாம் செய்த சமூகவிரோதச் செயல்கள் ஞாபகத்துக்கு வரும். அப்போது இயற்கையால் தாம் தண்டிக்கப்பட்டிருப்பது தெரியவரும். தாம் தடம் மாறிச் சென்றுவிட்டதை உணர்ந்து கொள்வர். நல்வழியில் தாம் பயணம் செய்ய வேண்டிய வண்டியைத் தவறவிட்ட வேதனையில் யாருமற்று - நாதியற்று வீதியில் திரிய நேரிடும். எனவே இப்போதே விழித்துக் கொள்ளுங்கள்...! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

தொடர் 46

# சரசாலை

வட இலங்கையிலுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரிவில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள முக்கிய பிரதேசமாகும். தமிழ் மரபுகளும் இந்து நெறியும் தழைத்தோங்கிய தன்மானம் மிக்க இடங்களுள் சரசாலையும் முதன்மையான கிராமமாகும். இவ்வூருக்கு வடக்கில் கப்பூது கிராமம், கிழக்கில் மீசாலை மந்துவில் என்பனவும், தெற்கில் மட்டுவில், மேற்கில் வலிகாமம் பிரிவைச் சேர்ந்த வாதரவத்தையும் உள்ளன.

யாழ்ப்பாணம் - கண்டி வீதிக்கு வடக்கே சாவகச்சேரியில் இருந்து ஏறத்தாழ ஐந்து கிலோமீற்றர் தொலைவிலுள்ள இவ்வூருக்கு பருத்தித்துறை நோக்கிச் செல்லும் சரசாலை - நுணாவில் வீதியூடாகவும் பயணம் செய்யலாம்.



சரசாலை எனும் பெயர் இராமாயண காலத்துடன் தொடர்புபட்டு உருவான காரணப் பெயராகும். இராமாயண யுத்த காலத்தில் இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்திருந்த இராமபிரானும் அவரது சேனைகளும் இவ்வூரிலே போருக்காகப் பயன்படுத்தப்பட்ட அம்புகளைத் தயாரித்தார்கள். அம்பு என்பதை சரம், சரசு எனவும் அழைக்கப்பட்டது. எனவே அம்புகளை உற்பத்தி செய்யும் இடமாக இருந்தமையால் இது சரசு ஆலை என அழைக்கப்பட்டு சரசாலை ஆயிற்று எனலாம்.

மேலும், சிறப்பாகப் பார்க்கும்போது, சீதையைச் சிறை மீட்க இலங்கை வந்த இராமர் மாதகலில் உள்ள திருவடிநிலைக் கடற்கரையில் இறங்கினார். அங்கிருந்து முன்னேறி இராவணனுடன் போர் புரிவதற்குத் தேவையான ஆயுதங்களை (சரங்களை) இந்த ஊரிலேயே களஞ்சியப்படுத்தினார். இதனால் இவ்வூருக்கு சரசாலை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்றும் சொல்கின்றனர்.

இந்த இடத்துக்கு இன்னொரு வகையிலும் பொருள் கூறுவர், இப்பகுதியில் மரங்கள் செறிந்து சருகுகள் பெருகிக் காணப்பட்டதால் 'சர சர' என்ற ஒலி நிலையில் இப்பெயர் ஏற்பட்டதாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர்.

பருத்தித்துறை, சுன்னாகம், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய ஐந்து இடங்களிலும் இருந்து வரும் பெருஞ் சாலைகள் சரசாலை - கனகம் புளியடிச் சந்தியில் ஒன்று சேர்கின்றன.



சரசாலையில் விநாயகர், ஐயனார், காளி முதலான தெய்வங்களுக்கு இங்கு கோவில்களும் அமைக்கப்பட்டுள்ளன.


இவ்வூர் பகுதிக்குள் பறங்கி வாய்க்கால், மாத்தளாய் என்ற சிறு குளத்திலிருந்து செல்கிறது. இவ்வாய்க்கால் போர்த்துக்கேயரால் வெட்டப்பட்டதெனக் கூறப்படுகின்றது. சரசாலை வடக்கில் பறவைகள் சரணாலயம் (குருவிக்காடு) காணப்படுகின்றது. இங்கு பல வெளிநாட்டுப் பறவைகளையும் காணமுடியும்.

கல்விப்புலத்தின் வளர்ச்சிக்கு சரசாலை சரஸ்வதி வித்தியாலயம், ஸ்ரீகணேசா வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் பெரும் பங்காற்றி வருகின்றன.

விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற விடயங்கள் குறித்தும் சரசாலை மக்கள் தனித்தன்மை மிக்கவர்களாக விளங்கியிருந்தனர் - விளங்குகின்றனர். அவ்வகையில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியிலும் அடிக்கடி ஈடுபட்டு வருகின்றனர். இப்போட்டியில் வட பகுதியிலுள்ள அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் காளைகளும் பங்கெடுக்கின்றன. கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தால் மாட்டுவண்டிச் சவாரி தடைப்பட்டிருந்தது. ஆனாலும் தற்போது சீரான முறையில் இந்தச் சவாரி மீண்டும் இடம்பெற்று வருவதனைக் காணலாம்.

இவ்வாறாக சரசாலை தனித்துவமான வாசனை வீசும் தமிழ்க் கிராமமாக விளங்கி வருவதைக் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

## மேடம்
இந்த வாரம் கிரகங்களால் அளப்பரிய நன்மை கிட்டும். மனதில் உருவான குழப்பம் விலகும். சமூக சேவைப்பணிக் காகப் பாராட்டுப் பெறுவீர்கள். புதியவாய்ப் புக்களைப் பயன்படுத்தி பணவரவை அதி கரிப்பீர்கள்.

## துலாம்
கிரகங்கள் ராஜயோக பலனைத் தருவர். எண்ணமும் செயலும் புத்துணர்வு பெறும். புதிய வாகனம் வாங்கும் வசதி வாய்ப்புக் கிடைக்கும். பிள்ளைகளின் செயல்கள் சிறப்பாக அமைந்திட உதவுவீர்கள். ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் வேண்டும்.

## ரிஷபம்
இந்தவாரம் சந்திரனால் நன்மை உண்டாகும். அயலார் அன்பு பாராட்டுவர். மனமும் செயலும் உற்சாகம் பெறும். வாகனப் பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகள் பெற்றோரின் வழிகாட்டுதல்களை ஏற்றுக்கொள்வர். ஆரோக்கியம் சீராக இருக்கும்.

## விருச்சிகம்
கிரகங்கள் நல்ல பலன்களைத் தருவர். எவரிடமும் நிதா னித்து பேசுவீர்கள். செல்வ வளம் அதிகரிக்கும்.வீடு, வாகனத்தில் தகுந்த பாதுகாப்பு வேண்டும். பிள்ளைகள் நற்செயலால் பெற்றோரின் அன்பைப் பெறுவர்.

## மிதுனம்
இந்த வாரம் தாராளமாக நல்ல பலன்களே நடக்கும். மனதில் இருந்த குழப்பம் வில கும். உங்களைப் புகழ்ந்து பேசு பவர்களிடம் கவனமாக இருங்கள். பிள்ளை களின் தகுதி, திறமைக் கேற்ப செயற் திறனை அதிகரித்துக் கொள்ளுங்கள். சொத்தால் பணவரவு கூடும்.

## தனுசு
கிரகங்கள் பலனை வழங்குவர். எதிர்பார்ப்புத் திட்டமிட்டபடி நிறைவேறும். சமூகத்தில் உங்களின் நன்மதிப் புப் பெருகும். சகோதர பாசம் நெகிழ்ச்சி தரும். பிள்ளைகள் படிப்பில் மேம்படுவர். பூர்வ சொத்துப் பராமரிப்பில் தகுந்த கவனம் வேண்டும்.

## கடகம்
இந்தவாரம் கிரகங்களின் சேர்க்கை வியத்தகு நற்பலன்களைத் தரும். பணிகளின் முக்கியத்துவம் உணர்ந்து செயல்படுவீர்கள். உறவினர்கள் உதவுவர். பிள்ளைகளின் மனதில் ஞானம் நிறைந்த சிந்தனை தோன்றும்.

## மகரம்
கிரகங்கள் நற்பலன்களைத் தருவர். மனதில் உள்ள நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டும். நண்பரின் உதவி கிடைக்கும். பிள்ளைகள் புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவுகளை உண்ண வேண்டாம்.

## சிம்மம்
சமூகத் தேவைகளை உணர்ந்து செயல்பட வேண்டும். தாமதமான பணிகள் புதிய முயற்சியால் நிறைவேறும். தாய்வழி உறவினர்கள் உதவுவர். பிள்ளைகளின் கவனக்குறைவை புதியஅணுகுமுறையால் சரி செய்யவும்.

## கும்பம்
கரக சஞ்சாரம் நற்பலனைத் தரும்.கிடைக்கும். எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைந்திட புதிய வாய்ப்புகள் வந்து சேரும். விரும்பியபடி வாகனம் வாங்க யோகம் உண்டு. பிள்ளைகள் நல்ல விதமாக நடந்து கொள்வர்.

## கன்னி
கிரகங்களால் வியத்தகு அளவில் நற்பலன் கிடைக் கும். சிறு பணியும் நேர்த்தி யாக அமையும். உறவினர் வருகை மகிழ்ச்சியைத் தரும். குடும்பத்தேவை பூர்த்தியாகும். எதிர்ப்பாள ரால் இருந்த தொல்லை விலகும். தொழிலில் விற்பனை அதிகரிக்கும்.

## மீனம்
கிரகங்கள் நற்பலனைத் தருவர். சமூக நிகழ்வுகளால் இனிய அனுபவம் கிடைக்கும். கவனமுடன் எதிர்காலத் திட்டங்களை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகள் கடமையுணர்வுடன் நடந்து பெற்றோர்க்கு பெருமையைத் தேடித் தருவர்.



நுவரெலியா ஓல்டன் தோட்ட மக்கள் 29 அன்று கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தமது பகுதியில் 8 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பிரதான பாதை ஒன்றை புனரமைக்கக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை ஒன்று பூநகரியில் இடம்பெற்றது.





கடந்த ஜூலை 22 ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் பனை மான்மியம் என்ற பெயரில் வடக்கு மாகாண பனை எழுச்சி வாரம் நடைபெற்றது.



மாந்தை மேற்குப் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 52 மீனவர்களுக்கு மீன்பிடி வலைத்தொகுதி களை மாந்தை மேற்குப் பிரதேச சபையின் தவிசா ளர் செல்லத்தம்பு மற்றும் சபை உறுப்பினர் கந்தையா சௌந்தரநாயகம் பிரதேச செயலகச் செயலாளர் எஸ்.கேதீஸ்வரன்மற்றும் செயலகத் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் வழங்கி வைத்தனர்.



இணுவில் கந்தசாமி கோயில் தொண்டர் சபையி னால் நடத்தப்பட்டுவரும் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப்போட்டி கடந்த ஞாயிறு 28 ஆம் திகதி நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹலோ குட்டீஸ் - தொகுப்பு - ஏஜெனி -
புதுநீதி

## குறள் அறிவோம் வாழ்வில் உயர்வோம்



**அதிகாரம் 5: இல்வாழ்க்கை**

**1. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை.**

இல்வாழ்வான் - இல்லறத்தைச் சரியாகக் கடைப்பிடித்து வாழ்பவன்

இயல்புடைய மூவர் - நல்ல இயல்புகளையுடைய மூவர்

"மூவர்" - என்பதற்கு பலர் பலவித விளக்கங்கள் கூறியுள்ளனர்

மூவர் - மனைவி, மக்கள், பெற்றோர்

மூவர் - ஆசிரியர், பிரம்மச்சாரிகள், துறவிகள்

மூவர் - பிள்ளைகள், பெற்றோர், உறவினர்

நல்லாற்றின் - நல்ல வழியில்

சிறந்த இல்வாழ்க்கை நடத்துபவன் என்பவன், அறத்தின் இயல்பையுடைய மூவர்க்கும் நல்வழியில் துணைநிற்பவனே ஆவான்.

மூன்று அறநிலைகள் - கல்வி, மனைத்துறவு, துறவு

அதனால் அறத்தின் இயல்புடைய மூவர் என்போர் கல்வி - ஆசிரியர் மனைத்துறவு - பிரம்மச்சாரிகள் துறவு - துறவிகள்

## ஏளனம் நீ செய்யாதே!



மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை;
புனிதமான கடவுளுக்கு
பூசை செய்ய உதவுதே!


கன்னங்கரிய குயிலிடம்
காது குளிரும் கீதமோ;
இன்பம் இன்பம் என்றுதாம்
இன்னும் கேட்கும் குரலாமே

ஊசி போன்ற முள்ளிலே
உயர்ந்த ரோசா மலருதே;
வீசும் நல்ல மணத்தோடு
விரும்பி அணியச் செய்யுதே!

மோசமான இடத்திலும்
மிகுந்த நல்ல பொருளுண்டே
எவ்வாய் இருந்த போதினிலும்
ஏளனம் நீ செய்யாதே!

ஈசாப் நீதிக் கதைகள்

# ராஜாவும் மந்திரிகளும்



**ஒரு** ஊரில் ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு உலக அறிவு என்பது சிறிதும் கிடையாது. மழைக்குக் கூட பள்ளிக்கூடத்துப் பக்கம் அவன் ஒதுங்கியது இல்லை. தன்னை எல்லாப் புலவர்களும் வாழ்த்திப் பாடவேண்டும்என்பது இவனது ஆசை. எவராவது ஒரு புலவர் வந்து இவனைப் புகழ்ந்து பாடி விட்டால், பாடிய புலவரின் சுவடியின் எடைக்கு எடை பொன் கொடுப்பான்.

பாட்டின் நயமோ, நிலையோ தெரியாத இவன் இவ்வாறு பரிசளிப்பது வேடிக்கையாகவும். வினோதமாகவும் இருந்தது. ஒரு புலவன் அரசனுக்கு புத்தி புகட்ட விரும்பினான். தராதரம் இல்லாமல் எல்லாப் பாடல்களையும் ஒரே தரத்தில் மதிப்பிடுவது அவனது கோபத்தைக் கிளறி இருந்தது. ஒரு நாள் இவன் மன்னனிடம் சென்று தான் மன்னரைப் புகழ்ந்து ஒரு பாடல் எழுதியிருப்பதாகக் கூறினான்.


மன்னர்அந்தப் பாடலைப் பாடிக் காண்பிக்குமாறு புலவனைக் கேட்டார். புலவர் ஒரு இனிமையான பாடலைப் பாடி முடித்தார். மன்னனுக்குப் பொருள் புரியாவிட்டாலும், கேட்க இனிமையாக இருந்தது. தனது மந்திரியை அழைத்து எடைக்கு எடை பொன் கொடு என்று கட்டளையிட்டார். மந்திரி பாட்டை எழுதிய ஓலையைக் கேட்டார். அதை - தன்னால் தூக்க முடியவில்லை என்றும் இரண்டு பேரை கூடவே அனுப்பினால் எடுத்து வரலாம் என்றும் புலவர் கூறினார்.

வெளியில் வந்து பார்த்த மந்திரி, வண்டியில் ஏற்றப்பட்ட ஒரு பெரிய பாறாங் கல்லில் பாடல் செதுக்கப்பட்டிருந்ததைக் கண்டார். பாறாங்கல்லை எடுத்து வந்து, அதை நிறுக்க முயன்றார் மந்திரி. அதன் எடைக்கு ஏற்ப தங்கம் கொடுக்க மந்திரியால் முடியவிலை. மன்னர் வெட்கித் தலைகுனிந்தார். அன்றுடன் ராஜா இந்த வழக்கத்தைக் கைவிட்டதுடன், தனக்கு ஒரு குருவை அமர்த்தி, கல்வி கற்க ஆரம்பித்து, நாட்டை சிறப்பாக ஆண்டான்.

**நீதி : உலகில் கல்விச் செல்வமே சிறந்த செல்வம்.**

## நல்ல தமிழ் கற்போம்

### தா, கொடு, ஈ




இந்த வாரம் இந்த மூன்று சொற்களிலுள்ள வேறுபட்ட கருத்தைப் பார்ப்போம்.

இந்த மூன்று சொற்களுக்கும் இடையிலுள்ள நுணுக்கமான வித்தியாசத்தை "நன்னூல்"என்னும் இலக்கண நூல் வெளிப்படுத்துகிறது.

நம்மை விட உயர்ந்தவர்களிடம் எதையாவது கேட்கும்போது, "ஈ" அல்லது "ஈந்திடுங்கள்."

நமக்குச் சமமானவர்களிடம் எதையாவது கேட்கும்போது "தா" அல்லது "தாருங்கள்"

நமக்குக் கீழே உள்வர்களிடம் எதையாவது கேட்கும்போது "கொடு" அல்லது "கொடுங்கள்".

## கேள்விக்கென்ன பதில்?

1. இந்தியா, வங்க தேசம், சீனா இடையே ஓடும் நதி என்ன?
2. உலகிலேயே அதிக அளவு காப்பி விளையும் நாடு எது?
3. உலகின் மிகச் சிறிய கடல் எது?
4. சீனாவின் தலைநகரம் எது?
5. பாரதியார் தமிழ்நாட்டில் எந்த ஊரில் பிறந்தார் ?


**விடைகள்**

1. பிரம்மபுத்திரா 2. பிரேசில்
3. ஆர்க்டிக் கடல் 4. பெய்ஜிங் 5. எட்டயபுரம்.


## தந்தையர் யாரோ?



1. இயற்பியலின் தந்தை நியூட்டன்
2. அரசியல் அறிவியலின் தந்தை அரிஸ்டோட்டில்
3. மருத்துவத்தின் தந்தை ஹிப்போகிரேட்டஸ்
4. செல்போனின் தந்தை மார்ட்டின் கூப்பர்
5. தொடருந்தின் தந்தை ஜோர்ஜ் ஸ்டீவன்சன்



## தெரிந்த பழமொழி தெரியாத சங்கதி



**ஆமை புகுந்த வீடு உருப்படாது**

'ஆமை ஒரு வீட்டிற்குள் புகுந்துவிட்டால் அந்த வீடு உருப்படாமல் போய்விடும்' என்று இந்த பழமொழிக்குப் பொருள் கொண்டு 'ஆமையின்' மேல் ஒரு 'துரதிர்ஷ்டசாலி' என்னும் பழியைப் போடுகின்றனர் நம் மக்கள்

திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றல்லவா இந்த ஆமை அவதாரம். திருமால் இருக்கும் இடம்தானே திருமகள் வாசம் செய்யும் இடம். எனவே இந்த தவறான கருத்தை இன்றோடு கைவிடுங்கள்.

காளான் பூத்த வீடு உருப்படாமலேயே போய்விடும். இதைத்தான் இந்தப் பழமொழியும் கூறுகிறது. சரியான பழமொழி இது தான்:


**'ஆம்பி பூத்த வீடு உருப்படாது.'**

**(ஆம்பி + காளான்)**

இதில் உள்ள தூய தமிழ்ச்சொற்களான 'ஆம்பி பூத்த' என்பன கொச்சைச் சொற்களாக மாறி பின்னர் உருமாறி இறுதியில் மீண்டும் தூய தமிழ் வடிவம் பெற்று இவ்வாறு நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழ்ப்படிபவனே தலைவன்



யாருக்குக் கீழ்ப்படிதல் தெரியுமோ, அவனுக்குத் தலைமை தாங்கவும் தெரியும். முதலில் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ளுங்கள். மேலை நாட்டினரிடையே சுதந்திர உணர்ச்சி தீவிரமானதாக இருந்தாலும், கீழ்ப்படிகிற உணர்ச்சியும் அதே அளவுக்குத் தீவிரமாக உள்ளது. நாமெல்லாம் மமதையுள்ளவர்கள். இந்த அகங்காரம் எந்த வேலையையும் நடக்க விடாது.

மகத்தான துணிச்சல், வரம்பில்லாத தைரியம், அபாரமான சக்தித் துடி துடிப்பு இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக பரிபூரணக் கீழ்ப்படிதல் இந்தக் குணங்கள் தனி மனிதனையும் தேசத்தையும் மறுமலர்ச்சி நிலைக்கு இட்டுச் செல்கின்றன.


இங்கே எல்லோரும் தலைமை தாங்க விரும்புகிறார்கள். கீழ்ப்படிய எவருமில்லை. பெரிய வேலைகளைச் செய்யும்போது, தலைவனின் கட்டளைகளை மறுபேச்சின்றிக் கீழ்ப்படிந்து நிறைவேற்ற வேண்டும்.

மடத்தின் சாக்கடையைச் சுத்தம் செய்வதில், எஞ்சியுள்ள எனது வாழ்நாள் முழுவதையும் கழிக்க வேண்டும் என்று எனது 'குரு பாயி' சகோதரர்கள் கூறினால் அந்தக் கட்டளையை எவ்வித எதிர்ப்பு முணுமுணுப்புமின்றி கீழ்ப்படிந்து கட்டாயமாக நிறைவேற்றுவேன் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

பொது நன்மையைக் கருதி வருகிற கட்டளையை, எவ்விதமான சிறு முணுமுணுப்புமின்றிக் கீழ்ப்படிந்து நிறைவேற்ற யாருக்குத் தெரிகிறதோ அவன் மட்டுமே உயர்ந்த தளபதியாக ஆகமுடியும்.

கீழ்ப்படிதலாகிற நல்ல குணத்தைப் பழகிக் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் உங்களது சொந்த நம்பிக்கையைக் கைவிட்டுவிடக் கூடாது. மேலதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்காவிட்டால் எந்த வேலையையும் ஒரு குடைக்கீழ் கொண்டுவர, ஒரு மையப் புள்ளியில் திரட்டி ஒற்றுமைப்படுத்த முடியாது. தனிப்பட்ட சக்திகளை இப்படித் திரட்டி ஒரு மையத்தில் இணைக்காமல், எந்தப் பெரிய காரியத்தையும் நிறைவேற்ற முடியாது.

# ஒட்டகம் காட்டிய வழி



பாலைவனத்தின் கப்பல் என்று ஒட்டகங்களைச் சொல்வார்கள். அண்ணல் நபிகளின் காலத்தில் அவரது செய்தியைப் பரப்புவதற்கும் ஓர் ஒட்டகம் மிகவும் துணையாக இருந்தது. மக்காவிலிருந்த மன்னரின் தொடர்ந்த துன்புறுத்தல்களால் மதீனா செல்ல நினைத்த நபிக்கு அந்த ஒட்டகமே உதவியது. பயணத்தின் நடுவில் தம்மைக் கொல்ல வந்த எதிரிகளிடமிருந்து தப்பிக்க நபிகள் ஒரு குகையில் தங்கினார்.

ஒரு நள்ளிரவில் மதீனாவுக்கு மீண்டும் தனது பயணத்தைத் தொடங்கினார் நபிகள். அந்த வழியில் பல அற்புதங்கள் நடக்கத் தொடங்கின. மக்காவுக்கும் மதீனாவுக்கும் 350 கிலோமீற்றர் தூரம் இருக்கும். அக்காலத்தில் அந்த தூரத்தைக் கடக்க, 11 முழு நாட்கள் ஆகும். ஆனால் நபிகளைச் சுமந்து சென்ற ஒட்டகமோ எட்டே நாட்களில் மதீனாவுக்குச் சென்றுவிட்டது.


நபிகள் இரவில் பயணம் செய்தார். பகல் பொழுது முழுவதும் ஓய்வெடுத்தார். எட்டாம் நாள், நபிகள் குபாவை அடைந்தார். அது மதீனாவிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரமே உள்ளது. அங்கே அவரது மருமகன் இமாம் அலி மற்றும் பிற குடும்ப உறுப்பினர்கள் வந்து சேரும்வரை தங்கியிருந்தார். அவர்கள் வந்த பின்னர் புனித நகரமான மதீனாவுக்கு பயணத்தைத் தொடங்கினர். பேரீச்சம் பழ மரங்கள் தெரியத் தொடங்கியதும் அவர்கள் மனதில் ஆனந்தம் அரும்பியது.

ஒரு குன்றின் மேல் அவரது வருகையைக் காண வந்திருந்த ஒருவன் இறை தூதரின் வருகையை அறிவித்துவிட்டான். மக்கள் அதைக் கேட்டதும், "அல்லாஹூ அக்பர்" என்று முழங்கத் தொடங்கினர். நபிகள் ஒட்டகத்திலிருந்து இறங்கி, ஒரு பேரீச்சை மரத்தின் நிழலில் அமர்ந்தார். நகரைச் சேர்ந்த பிரமுகர்கள் அவரை வணங்கி வரவேற்றனர். குழந்தைகள் பாடின.

மதீனா நகரத்தில் உள்ள சமூகத் தலைவர்கள் நபிகள் தங்கள் இல்லத்திலேயே தங்க வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தனர். நபிகளோ, தனது ஒட்டகம் எங்கே நின்று தன் கால்களை மடக்கி இளைப்பாறுகிறதோ அதுதான் தனது இல்லம் என்று கூறினார். நபிகளின் ஒட்டகம் சென்று கொண்டே இருந்தது. ஒரு பெரிய திறந்த வெளியில் சென்று நின்றது. விளைபொருட்களை உலரவைக்கும் இடம் அது.

அந்த இடத்தின் அருகில் வசித்துவந்த அபு அயூப் என்பவரின் தாய், நபிகளின் உடைமைகளை எடுத்து அவரையும் வரவேற்றுத் தன் வீட்டுக்குக் கொண்டு சென்றாள்.

# பாதம் கழுவிய பிதாமகன்



"நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியுடனும் இருக்கிறேன்" (மத்தேயு 11:29) என்று இயேசு குறிப்பிட்டார். தன் சீடர்களுக்கு மனத்தாழ்ச்சியைக் கற்பிக்க அவர் மறக்கவில்லை. பூமியில் இயேசு வாழ்ந்த கடைசி இரவு அது. தனது சீடர்களுடன் இரவு விருந்து நடக்கிறது. அப்போது இயேசு எழுந்து தம் மேலங்கியைக் கழற்றி வைத்தார். ஒரு வேலைக்காரனைப்போல ஒரு சிறு துண்டை இடுப்பில் அணிந்துகொள்கிறார்.

பின்பு, ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி, தமது சீடர்களின் பாதங்களைக் கழுவித் துடைக்க ஆரம்பிக்கிறார். அதன் பிறகே தனது மேலங்கியை அணிந்துகொள்கிறார். இயேசு ஏன் இந்தத் தாழ்மையான வேலையைச் செய்தார்?

இயேசுவே விளக்கமளிக்கிறார் பாருங்கள்: "நான் உங்களுக்கு என்ன செய்தேன் என்று புரிந்து கொண்டீர்களா? என்னை எஜமான் என்றும் போதகரே என்று அழைக்கிறீர்கள். எனக்கு உங்கள் இதயத்தில் உயர்ந்த இடத்தைக் கொடுத்திருக்கிறீர்கள்.

நீங்கள் எனக்குத் தந்திருக்கிற இடத்திலிருந்து இறங்கி உங்கள் பாதங்களைக் கழுவினேன் என்றால், நீங்களும் ஒருவருடைய பாதங்களை ஒருவர் கழுவ வேண்டும். நான் உங்களுக்குச் செய்தபடியே நீங்களும் செய்ய வேண்டும் என்பதற்காக உங்களுக்கு இந்த மாதிரியைக் காண்பித்தேன்" (யோவா. 13:12-15).

இப்படியொரு தாழ்மையான வேலையைச் செய்ய முன்வந்ததன் மூலம் தம்மைப் பார்த்துப் பாடம் கற்றுக்கொள்ளத் தம்முடைய சீடர்களுக்கு உதவினார். அந்தப் பாடம் அவர்களுடைய மனதில் நீங்கா இடம்பெற்றது. மனத்தாழ்மையுடன் நடந்துகொள்ள அவர்களுக்கு ஊக்கமளித்தது.

மனத்தாழ்மையின் முக்கியத்துவத்தை இயேசு தனது சீடர்களுக்கு வலியுறுத்திக் காட்டியது அது முதல் தடவை அல்ல. ஒருசமயம் தனது சீடர்களுக்கு மத்தியில் போட்டி மனப்பான்மை தலைதூக்கியபோது, இயேசு ஒரு சிறுபிள்ளையைத் தம் பக்கத்தில் நிறுத்தி, "இந்தச் சிறுபிள்ளையை என் பெயரை முன்னிட்டு ஏற்றுக்கொள்கிற எவனும் என்னை ஏற்றுக்கொள்கிறான் என்னை ஏற்றுக்கொள்கிற எவனும் என்னை அனுப்பியவரை ஏற்றுக்கொள்கிறான். உங்களெல்லாருக்குள்ளும் யார் தன்னைச் சிறியவனாக நடத்திக் கொள்கிறானோ அவனே உயர்ந்தவனாக இருப்பான்" என்று அவர்களிடம் சொன்னார் (லூக். 9:46-48).

மக்களிடம் செல்வாக்குப் பெற்றுவிட்ட தன்னைக் கொல்ல நினைக்கும் பரிசேயர்கள் முதன்மையான இடத்தைப் பெறவே துடிக்கிறார்கள் என்பதை இயேசு அறிந்திருந்ததால், "தன்னைத் தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (லூக். 14:11) என்று மற்றொரு சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டினார்.

சில சமயங்களில் தாழ்வாய்க் கருதப்படும் வேலைகளை நாம் மனப்பூர்வமாய் ஏற்றுச் செய்வதன் மூலம் இயேசு காட்டிய மனத்தாழ்மையை நம்மால் பின்பற்ற முடியுமா? நாம் யோசிக்க ஒரு நல்ல சந்தர்ப்பம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைந்து போகும் மர்மங்கள்!



வரலாறு தன்னகத்தே பல உண்மைகளைப் புதைத்து வைத்துள்ளது. இவ்வாறு பல உண்மைகளை புதைத்து ஆக்கிரமிப்பின் அடையாளமாக இன்றும் எம் மண்ணில் - யாழ்ப்பாணத்தில் நிமிர்ந்து நிற்கிறது கோட்டை.

350 ஆண்டுகளைக் கடந்தபோதும் அதன் கம்பீரமும் மிடுக்கும் குறையவில்லை. இந்தக் கோட்டை எம் மக்களிடையே ஏற்படுத்திய வலிகள் - கொடுமைகள் - துயரங்கள் - துன்பங்கள் - மரணங்கள் காலத்தாலும் மறக்கடிக்கப்பட முடியாதவை.

யாழ்ப்பாணத்து அரசை 1618 இல் வெற்றி கொண்ட பின்னர் 1625 இல் இந்தக் கோட்டையின் கட்டுமான வேலைகள் ஆரம்பமாயின. எனினும் தற்காலத்தில் இருக்கும் கோட்டை ஒல்லாந்தர் காலத்திலேயே அமைக்கப்பட்டது. இந்தக் கோட்டையைக் கட்டுவதற்காகப் பல ஆலயங்கள் இடிக்கப்பட்டன என்றும் தமிழர்கள் அடிமைகளாக்கப்பட்டு - சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டே கோட்டை கட்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இராணுவப் பாதுகாப்புக்கு எனப் போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட இக்கோட்டை பெரும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியிலேயே அமைக்கப்பட்டது. வெளிப் பிரதேசத்திலேயே இந்தக் கோட்டை ஆரம்பிக்கப்பட்டது என பின்னாளில் வரலாறுகள் கூறினாலும், யாழ்ப்பாண நகரின் முக்கிய பகுதிகளில் ஒன்றிலேயே கோட்டை அமைக்கப்பட்டது என அண்மைக்கால அகழ்வாராய்ச்சிகள் சொல்கின்றன. ஆக்கிரமிப்பாளர்கள் எப்போதும் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் இருந்து துரத்தியடித்து அந்த இடங்களை தம் ஆளுகைக்கு உட்படுத்துவது வழமை. (சுருங்கக்கூறின் தமிழர் நிலங்களை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்து இன்று உரிமை கோரி நிற்கும் இலங்கை இராணுவம் போன்று.)

இவ்வாறே யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியிலும் முன்னர் வாழ்ந்த மக்களைத் துரத்தியடித்து அந்த இடத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் தமது பாதுகாப்புக்கு எனக் கோட்டையை அமைத்தனர். அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இந்தக் கோட்டையில் இருந்தே தமது ஆளுகையை உறுதி செய்தனர். இலங்கைக்கு சுதந்திரம் கொடுத்த பின்னர், அரசாங்கம் கோட்டையைப் பொறுப்பெடுத்து, அதில் இராணுவத்தைக் குடியேற்றியது. ஆகமொத்தத்தில் தமிழர்களை ஆக்கிரமித்தவர்கள் இந்தக் கோட்டையில் இருந்தவாறே எம்மீது ஆதிக்கம் செலுத்தினர்.


போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டு அடிமைகளாகப் பிடிக்கப்பட்ட தமிழர்களைக் கொண்டே இந்தக் கோட்டை கட்டியெழுப்பப்பட்டது. இந்த அடிமைத் தமிழர்கள் சிந்திய வியர்வையும் இரத்தமும் இன்றும் இந்தக் கோட்டைச் சுவர்களினிடையே படிந்து கிடக்கிறது. கோட்டை கட்டப்பட்ட நாளிலிருந்து இந்நாள் வரை அதிலிருந்தவர்கள் தமிழர்களை அடிமைகள் போலவே நடத்தினர் - நடத்தவும் முற்படுகின்றனர். மீறுபவர்களை இரும்புக் கரம் - சட்டம் கொண்டும் தடுத்து பழி வாங்குகின்றனர்.

சுதந்திர இலங்கையில் தமிழர்கள் விடுதலை கேட்டு அகிம்சைப் போர் புரிந்தபோதும் இந்தக் கோட்டையில் இருந்த இராணுவமே அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தது. பின்னாளில் ஆயுத வழியைத் தமிழர்கள் நாடிய போதும் இங்கிருந்த இராணுவமே அப்பாவி மக்கள் மீது வன்முறைகளை வெளிப்படுத்தி அதை அடக்க முயன்றது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருந்தபோதும் கோட்டையை இராணுவம் தக்கவைத்துக் கொண்டது. அங்கிருந்தவாறே அப்பாவித் தமிழ் மக்கள் மீது ஷெல் தாக்குதல்களை நடத்தி பல உயிர்களைப் பறித்தது.

1986 இல் இவ்வாறான ஒரு நாளில்தான் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவன் விபுலானந்தன் என்பவரின் உயிரையும் கோட்டையில் இருந்த இராணுவம் பறித்தது. பாடசாலை வளாகத்துக்குள் வெள்ளைச் சீருடையுடன் நின்ற மாணவனை தனது உயிர் வெறிக்கு இலக்காக்கிக் கொண்டது இராணுவம். ஆனால் இதே தமிழர்கள் தங்கள் பரந்த மனப்பான்மையை வெளிப்படுத்திய சந்தர்ப்பமும் இந்தக் கோட்டையில் நடந்தது.

இதே ஆண்டில் கோட்டையை முற்றுகையிட்டு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். நீண்ட போரின் இடையே இராணுவத்துக்கு தலைமை தாங்கிய தளபதி கப்டன் கொத்தலாவல உணவுக்கு வழியின்றி பசியுடன் தவிப்பதாக புலிகளின் தளபதி கிட்டுவுக்கு தகவல் தெரிவித்தார். எதிரியை சரணடைய வைக்கக்கூடிய அந்தச் சமயத்திலும் தமிழரின் பண்பாட்டை கைவிடாது எதிரிக்கு வேண்டிய உணவை அனுப்பி அதன் பின்னர் தாக்குதலைத் தொடர்ந்தார்கள் புலிகள். இந்தச் சம்பவத்திற்கு முன்னரும் - கொத்தலாவல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை வகிக்காத பின்னைய நாட்களிலும் கோட்டையில் இருந்து கொண்டு அப்பாவி மக்கள் மீது தாக்குதல்களைத் தொடர்ந்திருந்தனர் இராணுவத்தினர்.

யாழ்ப்பாணம் இராணுவத்தின் வசமான பின்னர் ஏராளமான இளைஞர், யுவதிகள் பிடிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்கள். அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களில் ஒரு தொகையினர் - சுமார் 600 பேர் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது - செம்மணியில் புதையுண்டு போயினர். இதேபோன்று கோட்டைக்குள்ளும் புதையுண்டு கிடக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இக்காலப் பகுதியில் மட்டுமின்றி விடுதலைப் புலிகள் 1990 இல் கோட்டையைக் கைப்பற்ற முன்னர் - விடுதலைப் போர் ஆரம்பமான காலத்திலும் பல இளைஞர், யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டனர். இதேபோன்று கோட்டை அமைந்துள்ள பகுதியால் தனியாக இருவர், மூவராகச் சென்றவர்களும் காணாமல் போயிருந்தனர். அவர்களை இராணுவமே பிடித்திருக்கலாம் என்ற சந்தேகம் அப்போது எழும்பியிருந்தது.


குறைந்த உணவே கையிருப்பில் இருந்த போர் காலத்தில் இராணுவம் கைதிகளை வைத்திருந்திருக்க முடியாது. எனவே பிடித்து வைத்திருந்த கைதிகளை கொன்று புதைத்திருக்கலாம் அல்லது சித்திரவதைகளுக்கு உள்ளாகி இறந்தவர்களையும் அங்கு புதைத்திருக்கக்கூடும். இவ்வாறான நிலையில்தான் அண்மையில் கோட்டைப் பகுதிக்குள் கண்டெடுக்கப்பட்ட மோதிரம் ஒன்று பல செய்திகளை சொல்லாமல் சொல்லிச் சென்றது. அது மட்டுமின்றி இராணுவம் - இராணுவத் தளபதி - ஆளுநர் என ஆளாளுக்கு கோட்டை இராணுவத்துக்கே சொந்தம் என உரிமை கோருவதன் மூலம் கோட்டை வலயத்தைப் பாதுகாக்க முனைவது தெரிகிறது அதன் காரணத்தையும் உய்த்துணர வைக்கிறது.

அண்மையில் ஆய்வின் போது மோதிரம் கண்டெடுக்கப்பட்டதும், அங்கிருந்த தமிழ் உத்தியோகத்தர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது. இதன் பின்னர் அப்படியே அந்தச் செய்தியை மூடி மறைக்கும் கைங்கரியங்கள் இடம்பெறுகின்றன. இந்த மோதிர விவகாரத்துக்குப் பின்னரே இராணுவம் அங்கு இருந்தே ஆக வேண்டும் என ஆளுநரும் - கடந்த வாரம் அவசரமாக யாழ்ப்பாணம் வந்த இராணுவத் தளபதியும் 'கோட்டை இராணுவத்துக்கே" என்று உடும்புப் பிடியாக நிற்பதன் மூலம் அங்கு பல திடுக்கிடும் தகவல்கள் மறைந்து கிடக்கக்கூடும் என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

இலங்கை இராணுவம் நடத்திய பல படுகொலைகள் வெளிப்படையாகத் தெரிந்தாலும் வெளிவராத படுகொலைகள் பலவும் எண்ணுக்கணக்கற்றுக் கிடக்கின்றன. மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் இராணுவத்தின் பெரும் முகாம் அமைந்திருந்த பகுதியில் வெளிப்பட்ட எலும்புக்கூடுகள் இத்தகையதே. இதை மூடிமறைக்க இன்றளவிலும் பல திரைமறைவு செயல்கள் அரங்கேறியபோதும் முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பது எங்ஙனம் என்பதுபோலாகி விட்டது. எனவே வேறு இடங்களில் எலும்புக்கூடுகள் வெளிப்பட்டு தொந்தரவு தந்துவிடக்கூடாது என்பதற்காக இராணுவம் பல பகுதிகளை இன்னமும் விடாது வைத்திருக்கிறது.

இப்படி ஒரு விடயமே கோட்டை விடயத்திலும் நடந்தேறுவதாக நம்பப்படுகின்றது. தொல்பொருள் திணைக்களத்தின் ஆசியுடனும் இராணுவத்தை கோட்டையில் தொடர்ச்சியாக நிலைநிறுத்துவதன் மூலமும் அகழ்வாய்வுகளை நிறுத்தி உண்மைகளை மூடி மறைத்து விடமுடியும் என அரசாங்கம் நம்புகிறது.

■ நிலவன்



## கதைசொல்லும் மோதிரம்



கோட்டைக்குள் இடம் ஒன்றை ஆய்வுக்கு உட்படுத்தியபோது எஸ்.ஏ. எனப் பொறிக்கப்பட்ட இந்த மோதிரம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மோதிரம் குறித்து யாழ்ப்பாணத்தின் பிரபல நகை விற்பனையாளர் ஒருவரிடம் தொடர்பு கொண்டு கேட்டிருந்தோம்.

*1964 ஆம் ஆண்டுகளில் இந்த மோதிரம் யாழ்ப்பாணத்தில் அறிமுகமானது. 1970 களில் இந்த வகை மோதிரத்தையே பெரும்பாலான யாழ்ப்பாணத்தவர்கள் விரும்பி அணிந்திருந்தார்கள். சிங்களவர்கள் மத்தியில் இந்த மோதிரம் பிரபலமாகியிருக்கவில்லை. மோதிரத்தின் அமைப்பை வைத்துப் பார்க்கும்போது இந்த மோதிரத்தை தமிழர் ஒருவருடையது என்பதை உறுதியாகக் கூற முடியும். இன்றளவிலும் இவ்வகை மோதிரங்களின் பயன்பாடு இருக்கிறது என அவர் கூறினார்.*

அவரின் கருத்தை வைத்துப் பார்க்கும்போது: இந்த மோதிரத்துக்கு உரியவர் 90 களின் முற்பகுதியில் பிடிக்கப்பட்டு இராணுவத்தினரால் கொன்று புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதமுடியும். எனினும் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தும் பட்சத்தில் இந்த மோதிரத்துக்கு உரியவரையும் அதன் பின்னான சம்பவங்களையும் வெளிக் கொணர முடியும். ஆனால் அரசாங்கமும் இராணுவத்துக்கு உடந்தையாகச் செயற்படும் அகழ்வாராய்ச்சிகள் மற்றும் தொல்பொருள் திணைக்களமும் இதனைச் செய்யுமா...?

உலகப் புகழ் பெற்ற கவிஞர்களில் ஒருவர் கலீல் ஜிப்ரான். அவரின் கவிதைகளில் ஒன்றை இங்கு தருகிறோம். இக்கவிதையை இளவல் ஹரிகரன் என்பவர் தமிழில் மொழிபெயர்த்த "முன்னோடி" என்ற தொகுப்பில் இடம்பெறச் செய்துள்ளார்.

இதைப் படிக்கும்போது குதிரையில் போன மனிதனாக வடக்கு முதல்வர் நினைவுக்கு வந்தால் அது காலத்தின் தவறு.

## விமர்சகர்கள்



ஓர் இரவின் பொழுது, கடலை நோக்கி குதிரையின் மீது பயணம் செய்து கொண்டு இருக்கும் ஒரு மனிதன் சாலையோரம் உள்ள உணவகத்தை அடைந்தான்.

குதிரையை விட்டு இறங்கிய அவன், கடலை நோக்கிக் குதிரை சவாரி செய்யும் எல்லோரைப் போலவே மனிதர் மீதும் இரவின் மீதும் நம்பிக்கை கொண்டு தன் குதிரையைக் கதவருகே உள்ள மரத்தில் கட்டி வைத்து உணவகத்தின் உள்ளே சென்றான்.

நள்ளிரவில் எல்லோரும் உறங்கி விட்டபோது, ஒரு திருடன் வந்து அந்தப் பயணியின் குதிரையைத் திருடிச் சென்றான்.

காலையில் பயணி கண் விழித்த போது தன் குதிரை களவாடப்பட்டு இருப்பதைக் கண்டான். தன் குதிரையையும் திருட ஒரு மனிதனின் இதயம் இடங் கொடுத்துள்ளதே என வருந்தினான். பிறகு அவனுடன் தங்கியிருந்தவர்கள் அனைவரும் அவனைச் சுற்றி நின்று பேசலாயினர்:

முதல் மனிதன் சொன்னான்:

"குதிரை லாயத்திற்கு வெளியே உன் குதிரையைக் கட்டி வைத்தது உனது முட்டாள்தனம்!"

இரண்டாமவன் சொன்னான்:

"கால்களைக் கூடக் கட்டாமல் குதிரையைக் கட்டியது இன்னும் முட்டாள்தனம்!"

மூன்றாமவன் சொன்னான்:

"குதிரை மீது கடலை நோக்கிச் சவாரி செய்வது மிகுந்த முட்டாள்தனம்!"

நான்காமவன் சொன்னான்:

"சோம்பேறிகளும் நடக்கச் சோம்புபவர்களும் தாம் குதிரைகளை வைத்திருப்பார்கள்!"


பிறகு அந்தப் பயணி வியப்புற்று கடைசியில் சத்தமிட்டான்:

"எனது நண்பர்களே! எனது குதிரை திருடப்பட்டிருக்கிறதால் அவசர அவசரமாக நீங்கள் எல்லோரும் எனது தவறுகளையும் குறைபாடுகளையும் சொல்கிறீர்கள். ஆனால் ஆச்சரியம் பாருங்கள், ஒருவர்கூட என் குதிரையைத் திருடிச் சென்ற மனிதனைப் பற்றிக் குறை சொல்லவில்லையே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கையன்

# கலங்காத கண்கள்



அந்தக் காட்சியைக் கண்டதும் அப்துல்காதர் திகைத்தே போனார். அவருடைய எண்ணங்கள் யாவும் ஒன்றாய் திரண்டு, பஞ்சுக்கூட்டம் போல் எங்கேயோ மெதுவாக மிதந்து, மிதந்து சென்று கொண்டிருந்தன.

உணர்ச்சிகள் எதுவுமற்ற மரக்குற்றி போல அப்படியே ஆடாமல் அசையாமல் பேசாமல் நின்றார் அவர்.

'காசீம்!..."

அவரையும் அறியாமல் அதரங்கள் மெல்ல அசைந்து இந்தப் பெயரை உச்சரித்துப் பார்த்தன. நினைவுத்திரையில் அவனுடைய அழகு நிறைதோற்றம் வந்து நிழலாடியது. மயங்கும் கண்கள்... சுருண்ட கேசம்... இராச நெற்றி... வட்ட வடிவமான முகம்... செவ்வானச் சாயை...

அப்துல்காதருடைய உடல் மெல்ல, மெல்ல வெல வெலுப்பைக் குறைத்துக் கொண்டன. சிலிர்த்த உரோமங்கள் படமெடுத்த பாம்புபோல ஒடுங்கித் தோலுடன் சாய்ந்து கொண்டன. உள்ளமும் குமுறலைத் தணித்தது. தமது காலடியில் மூச்சற்றுப் பேச்சற்றுக் கிடந்த காசீமை ஒருமுறை பார்த்தார் அப்துல்காதர்.

அவருடைய மார்பு ஒரு தடவைக் கிருதடவையாக விம்மிப் புடைத்தது. 'இந்தக் காசீமா... 'இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டான்.... சே! நேர்மை. நியாயம், நீதி, எதுவுமே அற்ற உலகம்! முரட்டுச் சாதிங்களட்டை இருந்தால் எவனுக்கும் இந்தக் கதிதான் ஏற்படும்...! நினைவு தடுமாறியது!

அப்துல்காதர் அரசியலைப் பற்றி நினைத்துக் கொண்டதும் அவருடைய உள்ளம் உடல் எல்லாம் நடுங்கின. அந்த நேரத்தில் அப்படியே நின்றால்... யாராவது தன்னைப் பார்த்துவிட்டால்... காசிமுக்கு நடந்த அதேநிலைதான் தமக்கும் எற்படலாமென்று எண்ணினார்.

பழையபடி அவருடைய நிலை மிகப் பரிதாபமாக இருந்தது.

'இதென்ன...? காலெல்லாம் கசியுது..." தம்மையே கேட்டுக் கொண்டு குனிந்து பார்த்தார். வீதி நீளம் நாட்டப்பட்டிருந்த தெரு விளக்குகளில் ஒன்று அவருக்கு உதவியது. ஒளியின் உதவியுடன் கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு பார்த்தார் அப்துல்காதர்.

'ஐ... ய்...யோ...! ஹல்லா...!!"

அவருடைய வாய் அலறிவிட்டது!

அங்கே. 'தார்' வீதியிற் செங்குருதி பாய்ந்து கொண்டிருந்தது. குண்டுகள் பாய்ந்து காசீமின் உடலைக் கிழித்திருந்தன. இரத்த ஆறு ஓடியது! நெருப்பை மிதித்தவர்போல் துள்ளி மறுபுறம் வந்து காசிமைத் தூக்க முயன்றார். அவரால் முடியவில்லை!

முதுமையின் வீட்டு வாசலைத் தட்டிக் கொண்டிருந்த அப்துல்காதரால் கட்டிளங் காளையான காசிமைத் தூக்க முடியவில்லை. அந்த ஐந்து சந்தியில் எந்த வீதியில் மனித மிருகங்களுடைய வண்டி வந்து கொண்டிருக்கும் என்று அவரால் சரியாக நினைத்துப் பார்க்க முடியவில்லை. அந்த இடத்தைவிட்டு ஓடித் தம்முடைய உயிரைக் காப்பாற்றலாமே? என்றாலும் மனம் ஈடுபடவில்லை.

'வாழ வேண்டிய பொடியன் இந்தா போயிட்டான்... நெறி கெட்ட அந்த நீசங்களாலை.... இனிமேல் நமக்கெதுக்கு வாழ்வு?.... கொஞ்சம் முந்தி என்னோட என்ன மாதிரியெல்லாம் கதைச்சான்...? இந்தா இன்னைக்கு...? அப்துல் காதரால் மேற்கொண்டு எதையும் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை.

நினைவுத்திரையில் அவை மறைந்து கொண்டிருந்தன.

பதிலாக.

அடுத்த திரை விழுந்தது! தமிழர்கள் தம்முடைய உரிமைக்காக அகிம்சாவழிப் போராட்டம் நடத்திய வேளையில்... அதற்கு வயது ஐம்பத்தொன்பது நாட்களாக இருந்தபோது... அவசரகாலச் சட்டமும் ஊரடங்குச்சட்டமும் ஒன்றாக நாற்பத்தெட்டு மணித்தியாலங்களிற்கு பிரகடனப்படுத்தப்பட்ட அதேநாளில்... மத்தியான வேளை!

அப்துல்காதர் காசீமைக் கண்டார். அவன் அவருடைய இனத்தவன் தான்... இருந்தாலும் இதற்கு முன் அவர் அவனுடன் முகம் கொடுத்துக் கதைத்திருக்கவும் மாட்டார். ஐந்துசந்தி என அழைக்கப்படும் அந்த சோனக தெருவின் ஒரு மூலையில் அவர் இரும்புக்கடை வைத்திருக்கின்றார். அந்த வழியால போய்க்கொண்டிருந்த காசீமைக் கண்டதும் அவருக்குப் புதிய பிரச்சனை தோன்றியது. என்றும் இல்லாதவாறு அவனுடன் கதைக்க வேண்டும் போன்ற ஆசையும் அடிமனதைக் கிளறியது.

'தம்பி.... காசீம்!..... எங்கேப்பா போறா?"

'எனக்கு எங்கே போகக்கிடக்கிறது காக்கா? சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருக்கிறார்களே...! அந்தப் பெருமக்களுக்குச் சாப்பாடு எடுத்துக் கொடுக்க வேண்டும். அதுதான் போகிறேன்... நேரமில்லை!....' என்றவண்ணம் தொடர்ந்து நடந்தான் காசீம்.

'வயதில் முதிர்ந்தவர் வழியிலே கதை கேட்கிறாரே...! நின்று பதில் கூறிவிட்டுப் போவோம்! என்று எதுவித எண்ணமும் காசீமிடம் குடிகொள்ளவில்லை.

'கடமை அங்கே காத்திருக்கிறது... பொழுதுபோக்க என்னை மறித்து அழுது கொண்டிருக்கும் இவருடன் எமக்கென்ன கதை...? இப்படியும் காசீம் நினைக்கவில்லை. நேரத்தைப் பார்த்தான் காசிம்!

ஒரு மணி!

'ஐ...ய்...யோ! ஆண்டவனே! அங்கே அவர்கள் என்ன கஷ்டப்படுகிறார்களோ? நான் இங்கே நின்று வீணாக நேரத்தைப் போக்காட்டுகிறேன்...' என்ற ஒரே எண்ணந்தான் அவனிடம் வந்து போகிறது. மனதையும் முந்திக் கொண்டு அவ்னுடைய கால்கள் கச்சேரி வாசலை நோக்கி வந்துவிட்டன.

மக்கள் வெள்ளமே கச்சேரியின் வாசலிலும், மதிலிலும் வந்து முட்டிநின்றது. வீதி நிரம்பி வழிந்தது. அந்த வெள்ளத்தினிடையே கட்டுமரங்கள் சிலவற்றைப்போல வைத்த விழி வாங்காமல் சில இராணுவத்தினர் நின்று கொண்டிருந்தனர்.

அவர்களைக் காண காசீமுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. பற்கள் ஒன்றோடொன்று உராய்ந்தன. கண்கள் அகலவிரிந்து... படர்ந்தன.

'இந்த அறப்போர் தொடங்கப்பட்ட நாளில் மண்டை உடைபட்ட தலைவர்கள் எத்தனை பேர்? மானம், மரியாதை எதுவுமின்றி மாடு, ஆடுகளைப்போல் அடிபட்டவர்கள் எத்தனை...?

உடைபட்டவர்கள் எத்தனை...? எத்தனை..."

காசீமின் தலையே சுழல்வது போன்ற நினைப்பு...! ஒரு மூச்சு அடிவயிற்றில் பொங்கி வெளியே வழிந்தோடியது. கவலையில் பாதி. காசீம் எல்லா வேலைகளையும் முடித்து வீடு திரும்ப நன்றாக இருட்டிவிட்டது. வழமைபோல் அப்துல்காதர் தம்முடைய கடையைப் பூட்டிக்கொண்டு உள்ளே சென்றார். காசீமைக் கண்டதும் அவருடைய மனம் ஒருவித கிளுகிளுப்பை உணர்ந்தது. அகத்திலே ஒருவித மலர்ச்சி...!

'வாப்பா! வா! எல்லாம் முடிஞ்சு போய்ச்சா... இப்ப என்னதான் நடக்கபோகுது...? அவர்கள் உங்கடை உரிமையை கொடுக்கத்தான் போறாங்கள் என்ன?"

காசீமுக்கு வந்த கோபத்திற்கு அளவேயில்லை! அடக்கமுயன்றான், முடியவில்லை. 'இந்தா காக்கா எனக்கு மட்டும் இரத்தம் துடிக்குதில்லை. இலங்கையில்... இந்தியாவில் ஏன்? இந்த உலகத்திலுள்ள அத்தனை தமிழருடைய இரத்தமும் துடிக்கிறது. மொழிக்காகத் தன்னுடைய உயிரையே தியாகம் செய்ய எந்த மானமுள்ள தமிழனும் மறுக்கமாட்டான்! அவர்கள் எங்களுடைய உரிமைகளை எங்களிடமே விடத்தான் போகிறார்கள். இன்னும் இரண்டொரு நாளையில் அதுவும் தெரியத்தான் போகிறது!'.

'தம்பி! நான் சொல்லுறன் என்று வித்தியாசமா நினைச்சுப் போடாதே...! நாமேன் இந்தமாதிரியான சோலிகளிலை எல்லாம் தலைபோடுவான்? அவங்க தங்கடை உரிமை என்று பாடுபட்டால் பாடுபட்டுட்டுப் போகட்டுமே... யாருக்கென்ன? நீ சும்மா கிடவன்..."

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிகளின் காதலர்கள்...



புறாக்களைச் சுடுவதுபோல மனிதர்களை சுட்டுத்தள்ளும் துப்பாக்கிகளில் அப்படி என்ன காதல் வேண்டிக் கிடக்கிறது என்று வாய்க்கு வந்தபடி திட்ட ஆரம்பித்து விடாதீர்கள்.

ஐரோப்பாவின் ஐஸ்லாந்து நாட்டவருக்குத் தான் துப்பாக்கிகள் மீது நேசம். 2007 இல் இருந்து இன்று வரையில் ஒருவர்கூட துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்படாத நிலையில், இவர்கள் இதை வைத்திருப்பதில் என்ன தவறு என்பது இவர்களின் வாதம்.

அமெரிக்காவில் பலரிடம் துப்பாக்கிகள் இருக்கின்றன. இதனால்தான் அங்கு துப்பாக்கிகளால் பலர் கொலை செய்யப்படுகிறார்கள் என்றும், ஜப்பானில் நடைமுறையிலுள்ள கடுமையான சட்டம் காரணமாக துப்பாக்கிகள் மிகக் குறைவாகவே புழங்குகின்றன . இதனால் கொல்லப்படுபவர்களும் குறைவு என்ற வாதமும் உள்ளது.

இது தவறு போல் தெரிகிறது. காரணம் ஐஸ்லாந்தில் மூன்று பேரில் ஒருவரிடம் துப்பாக்கி இருக்கிறது. ஆனால் 11 வருடங்களில் ஒருவர்கூட துப்பாக்கிச் சூட்டால் மரணிக்கவில்லை.


இந்த நாட்டில் ஒரு துப்பாக்கிக்கு சொந்தக்காரர் ஆவதற்கு முன்பு பல தடைகள் தாண்டியாக வேண்டும்.

துப்பாக்கிகள் பற்றி நடத்தப்படும் கருத்தரங்கில் பங்குபற்றுவது முதல் நிலை. அடுதது, கடுமையான மருத்துவ பரிசோதனை. மனநிலை, உடல்நிலை இரண்டும் மருத்துவரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். பின்பு பொலிஸ் அதிபரின் நேர்காணல். அதைத் தொடர்ந்து விரிவுரைகளுக்கு செவிமடுக்க வேண்டும். அதன் முடிவில் எழுத்துப் பரீட்சை. இதன் முடிவிலேயே சுடும் பயிற்சி.

விண்ணப்பித்த காலத்திலிருந்து துப்பாக்கிக்கு சொந்தக்காரராக 3 தொடக்கம் 4 வருடங்கள் எடுக்குமாம்.

காதலிப்பவரைக் கைப்பிடிக்க இத்தனை ஆண்டுகளா?

# மரணத்தை வெல்வோமா?



மின்னியல் ரீதியாக மரணத்தை வெல்ல முடியும். அதற்கு 2050 என்று ஒரு காலத்தையும் குறித்து விட்டார்கள். இதை நீங்கள் நம்பத் தயாரா?

மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டது மரணத்தைத் தடுப்பது என்ற சங்கதிதான்! இனி அதையும் மனிதன் சாதித்து விடுவான் என்கிறார்மருத்துவர் பியார்சன.

'மனிதனுடைய புத்திக்கூர்மை, ஞாபகசத்தி, உணர்வுகள், வெளியிலுள்ள தொழில்நுட்பத்துடன். இணைக்கப்படக் கூடிய நிலை 2050 இல் உருவாகலாம். (அப்பிள் மின்னியல் சாதனங்களில் தரவுகளின் சேகரிப்பிற்கு கிளவுட்ஸ் உதவுவதுபோல)

ஒரு நாள் நீங்கள் மரணிப்பீர்கள். உங்கள் மூளையின் செயற்பாடும்நின்றுவிடும். ஆனால் அதே சமயம் உங்கள் மனம் 99 வீதம் அப்படியே இருக்கும். இது தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட்டு செயற்பட்டபடி இருக்கும்.

உங்கள் மரணச் சடங்கில் நீங்கள் கலந்து கொள்ள முடியும் என்று ஒரு வெடிகுண்டைப் போடுகிறார் இவர். உங்கள் உளம் மனோரீதியாக மேம்படுத்தப்பட்டு, உங்களுக்கு இளமையாக இருக்கும் உணர்வைக் கொண்டு வரும். உங்கள் வாழக்கையை நீங்கள் தொடரலாம் என்கிறார் இவர்.

கிளவுட் நினைவகததிற்கு சொந்தக்காரர்களாக இருக்கும் நிறுவனங்கள் ஆரம்பித்த பின்புதான் இது சாத்தியப்படும் என்கிறார் இவர். உங்கள்மனங்கள் இவர்கள் ஆளுகைக்குள் வருவதால், உங்களை தங்கள் அடிமைகள் போல நடத்தும் வாய்ப்பும் இருக்கின்றது என்று எச்சரிக்கிறார் இவர்.

மரணத்தை வெல்லவும் விஞ்ஞானமா? நினைக்கவே மயிர்க்கூச்செறிகிறது.




மனிதன் பூமியை என்ன பாடு படுத்துகிறான் என்பது, நம்மைச் சுற்றி பொய்க்கும் காலநிலையைக் கொண்டு எம்மால் நன்றாகவே உணர முடிகின்றது.

பனிப்பாளங்கள் நிறைந்த பிரதேசமான அந்தாட்டிக்கா நாம் நினைப்பதை விட வேகமாக உருகிக் கொண்டிருப்பதே இன்றைய நிஜம். இதன் தெற்குப் பிராந்தியத்தில் உள்ள பனிப்பாளங்கள் உருகி, உலகெங்குமுள்ள கடல் மட்டத்தை உயர்த்தும் பயங்கரம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றது. ஒரு தசாப்த காலத்திற்கு மேல் இருந்ததை விட, இப்போது மூன்று மடங்கு கூடிய வேகத்தில் பனிப்பாளங்கள் உருகுகின்றன என்ற தகவல் நம்மை சற்று அதிரத்தான் வைக்கும்.

விஞ்ஞான உலகம் இதைக் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறதா? தினமும் வெளியேறி காற்றில் கலக்கும் கார்பனின் அளவைக் கட்டுப்படுத்தி, அந்தாட்டிக்காவை உறைநிலையில் வைத்திருக்க இவர்கள் கைகொடுப்பார்களா?

அந்தாட்டிக்காவின் பனிப்பாளங்கள் எல்லாம் உருகினால், சமுத்திரங்களின் மட்டம் 50 மீற்றரால் உயர்ந்து விடும் என்பது சாதாரண விடயமல்ல. கடந்த 25 வருடங்களுக்கு முன்பு இழந்த பனிப் பாளங்களின் அளவை விட, கடந்த ஐந்து வருடங்களில் மும்மடங்கு பனிப்பாளங்களை இப் பிராந்தியம் இழந்துள்ளது.

இந்தக் கோலம் தொடர்ந்தால், 2070 அளவில், சமுத்திரங்களின் நீர் 27 சென்ரிமீற்றரால் உயர்ந்திருக்குமாம்!

அச்சுறுத்தும் புள்ளிவிபரந்தான்.




ஆண்களே இல்லாத உலகம் எப்படி இருக்கும்? நீங்கள் கற்பனை செய்ய வேண்டியதில்லை. ஒரு பெண்ணாக இருந்தால், பெண்களுக்கு என்றே அமைந்துள்ள ஒரு குட்டித் தீவுக்கு சென்றால் அறிந்து கொள்ள முடியும்.

சுப்பர் ஸீ தீவு (SuperShe Island) என்றே இதை அழைக்கிறார்கள். இது பின்லாந்தில் இருக்கும் ஒரு குட்டித் தீவு. எந்த ஓர் ஆணும் இங்கு காலடி எடுத்து வைக்க முடியாது. பெண்கள் முழுச் சுதந்திரத்தோடு உலாவ முடியும்.

இத் தீவை உருவாக்கியவர் கிறிஸ்டீனா றொத் என்பவர்தான்! இத்தீவுக்கு வர விரும்பும் [illegible] பரீட்சைக்கு [illegible] தெரிவு செய்யப்படுவார். கடந்த ஜூன் மாதம் ஆர[illegible]இந்தத் தீவில் [illegible] செயற்பாட்டில், ஒரே சமயத்தில் 10 பெண்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர். இதற்குப் பெரு விலையும் கொடுக்கத் தயாராக வேண்டும். ஒரு வார அனுமதிக் கட்டணம் 3,500 டொலர்கள் (சுமாராக 5 இலட்சம் ரூபா). இதை முன்கூட்டியே பதிவுசெய்தாக வேண்டும். குதிரையோட்டம், நீச்சல், நடனம் என்று எல்லாமே இருப்பதுடன் இங்கே தாராளமாக வளர்க்கப்பட்டிருக்கும் கனாபீஸ் போன்ற போதை செடிகளின் பாவனைக்கு எந்தத் தடையும் இல்லை.

பெண்கள் தங்களுக்கென வகுத்திருக்கும் எல்லையை மீறி, ஏனைய பெண்களோடு பழக இங்கே வாய்ப்பளிக்கப்படுகின்றது என்கிறார்கள்.

பெண்கள் உலகம் இது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகங்கள் சொல்லும் கதைகள்






முகங்களைப் பார்க்கின்றோம். அழகை இரசிக்கின்றோம். அழகற்றது என்று கருதுவதை அப்படியே விட்டுவிட்டுக் கடந்து சென்றுவிடுகிறோம். ஆனால் நாம் பார்க்கின்ற முகங்களுக்குள்ளே ஒரு புன் சிரிப்போடு பயணித்தோமானால் அது ஆயிரம் கதைகளைச் சொல்லும். அந்தக் கதைகளின் பின்னணியில் அன்பு இருக்கும். காதல் இருக்கும். சோகம் இருக்கும். துயர் தோய்ந்த சம்பவங்கள் இருக்கும். அதுவும் மூத்தோரின் முகங்களுக்குள் புதைந்திருக்கின்ற விடயங்கள் கணக்கிடப்பட முடியாதவை. ஆனால் அவைக்குள் எப்பொழுதும் ஒரு தேடல் இருக்கும். அந்தத் தேடலில் "யாராவது வரமாட்டார்களா? சிறிது மனம் விட்டுப் பேச.." என்ற ஒரு வாஞ்சை இருக்கும். கொடியொன்று படர விரும்புவதைப்போல அவர்கள் மானசீகமாப் படர விரும்புகிறார்கள். அதற்குகந்தாற்போல அவர்களுக்கு ஒரு அன்பு கொண்ட இதயம் வேண்டும். ஆனால் நாம் என்ன நினைக்கிறோம்? "இவர்களோடு பேசி என்ன வந்து விடப்போகிறது?" என்ற எண்ணத்தோடு அவர்களைக் கண்டாலும் நகர்ந்துவிடுகிறோம்.

ஆனால் எமது சமூகத்தில் ஊடாடித்திரிகின்ற அத்தகைய முதியவர்களுடன் தன் நலம் பாராது சிறுது தரித்திருந்து தனது கமெராவினூடாகப் பேசி இருக்கிறார் தர்மபாலன் திலக்சன் . அவர் அத்தகைய புகைப்படங்களுக்கூடாக ஒரு சமுதாயத்தை முன்னிறுத்தியிருக்கிறார். அந்த முகங்களுக்கூடாக சமூகத்திற்கு ஒரு செய்தியைச் சொல்லி இருக்கிறார். ஒரு சமூகம் முன்னெடுக்க வேண்டிய மூத்தோர் தொடர்பான சிந்தனை என்ன என்றதை விளக்க முற்பட்டிருக்கிறார். அவரெடுத்திருக்கும் புகைப்படங்கள் வெறுமனே படங்களாக இல்லாது, ஒவ்வொன்றும் ஒவ்வொரு கவிதை பேசுகிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறுகைதையின் தலைப்பாக அமைகிறது.சில நாவலுக்குரிய அத்தளத்தையிட்டுச் செல்கிறது. திலக்சனின் முயற்சிக்கு எமது நன்றி



வாள்வெட்டுக் கலாசாரத்தில் ஊறித் திரியும் எமது இளைஞர்கள் நடுவே. இத்தகைய சிந்தனைகளின் எழுச்சியானது வரவேற்கத் தக்கது.புதிய சிந்தனைகளின் உருவாக்கம் என்பது பாரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்த வல்லது.வேகமான உலகில் இவர் போன்ற இளைஞர்களிடமிருந்து வரும் புதிய சிந்தனைகளைப் புறந்தள்ளாது வரவேற்போம்.

தனது "முகங்கள்" என்று தலைப்பிட்ட அந்தப் புகைப்படக் கண்காட்சியைப் பற்றி தர்மபாலன் திலக்சன் என்ன சொல்லுகிறார் என்று கேட்போம்.


"சமூகத்தில் நீங்களும் நானும் அன்றாடம் பார்த்துக் கடந்து சென்ற முகங்கள் தான் இவை, அவற்றுள் நான் தரிசித்த சில வயதான முகங்களையே இங்கு ஒளிப்படமாகக் காட்சிப்படுத்தியுள்ளேன். இவை வெளிப்படுத்தும் உணர்வுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாதவையாக இருக்கும். இம்முகங்கள் ஒவ்வொன்றிற்குப் பின்னாலும் பல்வேறுபட்ட கதைகளுண்டு. அவை ஒன்றிற்கொன்று முரணானவை. எனினும், நான் அந்த முரண்களுக்கிடையிலும் முகங்களுக்கிடையிலும் ஒர் காண்பியரீதியிலான ஒற்றுமையினைக் கொண்டுவர முயற்சித்தேன். அம்முயற்சி கறுப்பு வெள்ளை நிறத்தெரிவின்பாற் பட்ட ஒரு பொதுமைப்படுத்தலைக் கோரிநின்றது. இப்பொதுமைப்படுத்தலானது மெய்யுருக்களின் பௌதீகத் தோற்றத்தைக் கடந்து அவற்றின் குணாம் சத்தைக்காண உதவியது. அவ்வகையில் முகங்களில் இருந்து அகங்களை நோக்கிய ஒரு உள்ளார்ந்த தேடலாக இந்த ஒளிப்படங்களின் தொடர் அமைகிறது" - என்கிறார் திலக்சன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











# நுகரும் தன்மையை இழக்கும் மீன்கள்



## காரணம் நாமே

மனித நடவடிக்கைகளால் வெளியிடப்படும் காபனீர் ஒட்சைட் ($CO_2$) உலகில் அதிக பரப்பளவு கொண்ட கடல்களால் உறிஞ்சப்படுகின்றன. இதனால் கடல் பெரிய கார்பன் உள்வாங்கியாக செயற்படுகிறது. இவ்வாறு கடல் காபனை உள்வாங்கும்போது அது தண்ணீரை அமிலமாக மாற்றுகிறது. கடலில் ஏற்படும் பல சிக்கல்களில் இதுமுக்கியமானது. கடலில் அமிலம் அதிகமாக உருவெடுப்பதால், மீன்கள் தங்கள் நுகர்வுத் திறனை இழந்து வருவதாக புதிய ஆய்வில் அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

மனித மூக்கைப் போல மீன்கள் நுகர்வுத் திறனை வைத்து மணத்தை அறிந்து உணவை எடுத்துக் கொள்ளும். உணவு தவிர பாதுகாப்பான வாழ்விடங்களைக் கண்டறியவும், பிற உயிரினத் தாக்குதலை தவிர்ப்பதற்காகவும் நுகர்வுத் திறனைப் பயன்படுத்தி வருகின்றன. கடலில் அதிகமாகயிருக்கும் அமிலத்தால் மீனின் நுகர்வுத்திறன் பாதிக்கப்படுவதால் உணவுகளை எடுத்துக் கொள்வதில் சிரமம் ஏற்படும். இதனால் பல மீன்கள் இறப்பைச் சந்திக்க நேரிடலாம். மீனின் தலைப்பகுதியில் கண்களுக்குப் பக்கத்தில் நுகரும் உறுப்பு (Olfaction) இருக்கும்.

இங்கிலாந்திலுள்ள, எக்ஸ்டெர் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளரான கலாநிதி கோசிமா போர்டீயஸ் தனது சக ஆராய்ச்சியாளர்களுடன் , உலக அளவில் மீன்களின் நுகர்வுத் திறன் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார். பெருங்கடலில் வசிக்கும் மீன்களுக்கு, கடலில் அதிகரித்து வரும் காபனீர் ஒட்சைட் எந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று ஆய்வு செய்தனர். அதன்பின்னர், கடல்சார் அறிவியல் நிலையம் (CCMar, Faro, Portugal) மற்றும் சுற்றுச்சூழல், மீன்வளர்ப்பு மற்றும் மீன்வள அறிவியல் (Cefas) ஆகிய மையங்களின் ஆராய்ச்சியாளர்கள் இணைந்து கொண்டனர். குழு மதிப்பீடு, அமிலத்தின் தாக்கம் உட்பட பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியாக நீரோட்டத்தில் அமிலத் தன்மை அதிகமாக இருப்பதை உறுதி செய்தனர். தற்போது இருக்கும் நிலை தொடர்ந்தால் மீன்களுடன் சேர்ந்து பல கடல் உயிரினங்கள் அழிவுக்குள்ளாகும் என்று கணித்துள்ளனர்.

மேலும், இதற்கு 18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியே காரணம். அப்போது படிய ஆரம்பித்த காபனீர் ஒட்சைட், இப்போது 43 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இந்த நூற்றாண்டின் இறுதியில், காபனீர் ஒட்சைட் அளவானது 250 சதவிகிதம் வரை உயரும் என்றும் ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவர்களின் சோதனை முடிவுகளின்படி, அமில நீரில் உள்ள மீன் வேட்டையாடும் தன்மையை எளிதில் இழக்கும். உணவுகளைத் தேடி அலையும். இந்த வகை பாதிப்படைந்த மீனானது உறையும் நிலையை அடையும். இது மிகவும் கவலை தரக்கூடிய விடயம்தான். நுகரும் திறனுடைய உறுப்பு நேரடியாக நரம்பு மண்டலத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். நேரடியாக நரம்பு மண்டலத்தை ஆய்வு செய்தபோதுதான் இத்தகைய தகவல்கள் கிடைத்தன. அதேபோல மீனின் மூக்குப் பகுதியில் காபனீர் ஒட்சைட்டின் படிவுகளும், அமிலத்தன்மை கலந்த படிவுகளும் இருந்தன. அதிலிருந்து எடுத்த படிவுகள் இந்த ஆய்வின் முடிவை உறுதி செய்தது.

வாசனை நுகரும் திறனை இழக்கச் செய்து அமிலம் மேலும் அதிகரிப்பது மீன்களின் இனப்பெருக்கத்திலும் அதிகமான பாதிப்புகளையும் உண்டாக்கும். இது கடலிலும் எதிர்மறையான விளைவுகளை உண்டாக்கும். சில நேரங்களில் காலநிலை மாற்றத்தாலும், தீய சம்பவங்கள் நிகழ்ந்தாலும் கடலில் அமிலத்தன்மை அதிகமாகும். உதாரணமாக, மனிதனின் இரத்தத்தின் பி.எச் அளவு 7.35 முதல் 7.45 வரை இருக்கும். அதில் திடீரென 0.2 - 0.3 அளவு பி.எச் அளவு குறைவதாக வைத்துக் கொள்வோம். இது நடந்தால் மனிதனுக்கு வலிப்பு, கோமா மற்றும் மரணத்தைக் கூட ஏற்படுத்தும். அதுபோலத்தான் கடல் நீரில் நிகழும் சிறிய அமில மாற்றமாக இருந்தாலும் அது கடலின் மொத்த சூழ்நிலையைச் சீர்குலைக்கும். அதில் வாழும் மீன் போன்ற உயிரினங்களின் வாழ்வை நிச்சயமாகப் பாதிக்கும். இப்பாதிப்பு இனப்பெருக்கத் தடை, நரம்பு மண்டல பாதிப்பு மற்றும் மீன்களின் வளர்ச்சி ஆகியவற்றை நிச்சயமாகப் பாதிக்கும்.

கடலில் அதிகரித்துவரும் அமிலத்தன்மை காரணமாக, காபனேற் அயனிகள் ஒன்றோடு கலந்து விடுகின்றன. இதனால் பவளப்பாறைகள், சிப்பிகள் மற்றும் சிறிய உயிரினங்களுக்கும் தீங்கை ஏற்படுத்துகிறது. கடல் சார் அமிலம் தாக்குவதால் பவளப்பாறைகள் போன்ற உயிரினங்களில் இருக்கும் சிம்பியோடிக் அல்கா வெளியேறுகிறது. இதனால் உயிரினங்கள் வெண்மையாக மாறி இறப்பைச் சந்திக்க நேரிடுகிறது. ஒருவேளை, மீன்களானது இந்நூற்றாண்டின் இறுதியில் அமிலத்தின் தாக்கத்தை ஏற்றுக் கொண்டு பரிணாம வளர்ச்சியை மாற்றிக் கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. அதிர்ஷ்டத்தால் நடந்தால்தானே தவிர நடைமுறையில் இது சாத்தியம் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியன்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

குளிர்நாட்டில் தனது கஷ்டத்தையும் வெளிக்காட்டுகிறது.

ஆரம்பத்தில் எளிமையான மேடையில் நாடகம் தொடங்கும்போது, பாரதியாரின் 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே ...' தமிழ்ப் பாடல் மனதை வருடும் குரலில் ஒலிக்கிறது! (சங்கரப்பிள்ளை இறந்த பின், அவர் விரும்பிய இப்பாடல் வரிகளைப் பக்கத்து வீட்டுப் பெண்ணும் மென்மையாகப் பாடுகிறாள்!) இந்நாட்டில் எமது தொன்மை இருப்பையும் அடையாளத்தையும் வேரூன்றிய தன்மையையும் அது வெளிக்கொண்டு வருகிறது.

இப்பாடலின் கருத்து சிங்களத்திலும் (தென்பகுதியில்) நாடகத்தின் போது சொல்லப்படுகிறதாம்! அவ்வாறே கடிதம் பெறுவதுகூட அரிய விடயமாயிருப்பது, தொலைபேசியில் ஆறுதலாகக் கதைக்கக் கப்பலில் கொழும்பு செல்லவேண்டியிருப்பது, மரணம் கொழும்பில் நிகழ்ந்தால் வெளியிலுள்ளவர்கள் வந்து போகலாம் யாழ்ப்பாணத்தில் என்றால் சாத்தியமில்லை என்ற நிலைமை, பிள்ளைகள் வெளிநாட்டுக்குச் செல்லவேண்டியிருப்பதான நாட்டுச் சூழல் போன்றன - எமது அக்கால வாழ்வின் அவலப் பின்னணிகளை வெளிக்கொண்டு வருகின்றன. நாடகம் வெளிப்படுத்தும் அக்கால நெருக்கடிச் சூழலும், மனிதர்களின் ஏக்கங்களும் அவலங்களும் எமக்குப் பழக்கமானவை தான்! ஆனால், சிங்களத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டு சிங்களப் பார்வையாளரிடம் கொண்டுசெல்லப்படுகையில் அது



விளைவிக்கும் தாக்கம், முக்கியமானது. இதுவரை அறியவந்திராத எமது அவலங்களை அவர்கள் அறியும் போது, அவர்களுக்கு அதிர்ச்சியாகவும் இருக்கும்.

நடிகர்கள் உணர்வுபூர்வமாக இயங்கி நாடகத்தின் செய்திகளைப் பார்வையாளரிடம் தாக்கமுறப் பதிக்கின்றனர். தபால்காரன் வரவில்லை "உங்களுக்கு ஒன்றுமில்லை" எனச் சிலவேளை அவன் சொல்வது நினைவுக்கு வர, "சங்கரப்பிள்ளைக்கு ஒன்றுமில்லை... ஓம்... சங்கரப்பிள்ளைக்கு ஒன்றுமேயில்லை!" எனத் துக்கத்துடன் அவர் சொல்லும் கட்டத்தில் எழும் 'இருத்தலியல் துயரம்' உச்சமானது! நடிப்பு, ஒளியமைப்பு, இசை என்பனவெல்லாம் இசைவுற்று சிறந்த நாடக அளிக்கையாக மாற்றி விடுகின்றன! தமிழ் வாழ்வின் அவல நெருக்கடிகளைச் சிங்களப் பார்வையாளரிடம் கொண்டு செல்லும் மிக முக்கியமான கலைச் செயற்பாட்டுக்காக, நெறியாளர் பராக்கிரம நிரியெல்லவை மதிப்புடன் பாராட்டுவோம்!

## ஆன்மாவின்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை இந்த ஆவணப்படத்தில் உணர்ந்து கொண்டேன்.

திபெத் நாட்டின் நில அழகியல் இங்கு சிறப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றது. நவீனங்கள் தீண்டாத இயற்கை அம்சங்களை, மாபெரும் மலைகளை, அழகிய வீதிகளைக் காட்சிப் பின்னணியில் பார்க்கையில், இந்த நில அமைப்பின் அமைதியும் எளிமையும் திபெத்திய மக்களின் வாழ்வில் பிரதிபலிக்கின்றது எனத்தோன்றியது.

இயக்குநர் Zhang Yang தனது கல்லூரிக் காலத்தில் திபெத்திற்கு மேற்கொண்ட பயணத்தினால், அந்த அனுபவங்களால் ஈர்க்கப்பட்டு சில வருடங்கள் கழித்து இந்த ஆன்மீகப் பயணத்தை Road Documentary ஆக உருவாக்கியிருக்கின்றார்.

திபெத் நாட்டை சீனா கைப்பற்றிய பின்னர் திபெத்திய மக்களின் கலை, கலாசார, வாழ்வியல் முறைகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு முழுக்க முழுக்க சீன மக்களின் வாழ்வியல் முறையை திபெத் மக்களின் வாழ்வியலாகவும் காட்டுவதன் மூலம் அவர்களது அடையாளங்களைச் சிதைத்து வருகின்றது. சீன இயக்குனரான Zhang yang இந்த ஆவணப்படத்தில் திபெத்தின் அரசியல் சூழலைப் பற்றி நேரடியாகப் பேசவில்லை என்றாலும் படத்தின் தலைப்பினை திபெத்திய மொழியில் சூட்டியதோடு திபெத்திய மக்களின் வாழ்வியல் முறைகளை, ஆன்மீக நம்பிக்கைகளை, நில அமைப்பினை முழுமையாகவும் நேர்த்தியாகவும் பதிவு செய்து அவர்களின் வாழ்க்கையை உலகத்திற்கு வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஆன்மீகம் என்பது உணரப்படும் நபர்களிலிருந்து பிறருக்கு உணர்த்தப்படக்கூடும் என்பார்கள். அதற்கேற்ப Paths of the Soul நிஜத்தில் இந்த மனிதர்கள் கண்டடைந்த ஆன்மீகத்தின் வழியாக அமைதியை நமக்குள் உணர்த்துகின்றது.

## கலங்காத....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்துல்காதர் தம்முடைய 'தொப்பி'யால் காசீமையும் மூடப்பார்த்தார். அவருடைய நீண்டநாள் நினைவு... கனவு... எண்ணங்கள் அத்தனையுமே உடைந்து கரையும் வண்ணம் செய்தது, காசீம் சொன்னவைகள்.

'கா...க்...கா...! எது உங்கடைய தாய்மொழி? நீங்க என்னுடன் இப்ப எந்த மொழியிலே பேசுறியள்? தன்மானம் என்ற ஒன்றிருந்தா இப்படிப் பேசுவீர்களா? அன்றைக்கு முஸ்லிம்களெல்லாம் சேர்ந்து செய்த சத்தியாக்கிரகத்தில் நீங்கள் பங்குபற்றவில்லை. இதுதானா உங்களுடைய நேர்மை? நியாயம்? இது உங்களுக்கு கண்ணியமாக இருக்கிறது. எங்களுக்குச் சரிவராது... நாங்கள் தமிழர்கள்...! எங்களுக்கு தன்மானம் என்ற ஒன்றுண்டு. அதுதான் பெரிது..." ஆவேசத்தில் வார்த்தைகள் வெளிவந்தன. அவனுடைய கைகள் நடுங்கின. கால்கள் நிலையிழந்து, அவனுடைய உடலையே மண்ணில் வீழ்த்துவது போல முடங்கின. உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கண்கள் இருண்டு கொண்டு வந்தன. எதையெல்லாமோ பேசினான் காசீம்.

அப்துல்காதருக்கு மூக்கே சிவந்துவிட்டது. 'என்னடா பயலே! ஒரு மாதிரி முறைக்கிறே...! உன்னுடைய இரத்தம் அப்படிச் சொல்லுது... இண்டைக்கு ஏதோ மந்திரிசபை கூடுதாம். ஆமிகள் வந்து உன்னை ஒரு கை பார்த்தப்புறம் எல்லாம் தெரிஞ்சுக்கத்தான் போறே!"

முனிவர் ஒருவர் சாபம் போட்டால் எப்படி இருக்குமோ? அப்படியிருந்தது அவருடைய நிலை. அதே கோலம்.... அதே பேச்சு... அதே சாட்சி!

காசீம் எதையோ சொல்ல நினைத்து அதரங்களை அசைக்கப்போனான். ஏதோ ஒருவித ஒலம் வந்து தடுத்துவிட்டது!

'காக்கா!...... கா.....க்......கா! ஆமியள் சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்தவங்களை எல்லாம்... கொல்லுறாங்கள்.... எல்லாரும் திசை தெரியாமல் ஓடுறாங்கள்...."

சைக்கிளிலே ஓடிவந்த ஒருவனின் குரல் மட்டும் கேட்டது. பறை அறைபவனைப் போல மணியை அடித்துச் செய்தியையும் பரப்பியபடி ஓடிவந்தான் அவன். இந்த இருவரையும் கண்டு எதுவும் கூறவில்லை. முன்பு சொன்ன வார்த்தைகளையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு ஓடினான்.

காசீம் 'காதர் காக்காவிடமும் எதுவும் சொல்லிக்கொள்ளாமல், கால்கள் போன போக்கில் விறுவிறுவென நடந்தான்.

மனோகரா படமாளிகை வீதியில் அவன் இறங்கி நடந்ததும், அப்துல்காதர் அறைக் கதவைச் சாத்திக் கொண்டார். ஒரு நிமிடம் சென்றிருக்க முடியாது!

'டுமீல்! டுமீல்!! என்ற வெடிச்சத்தம் வானில் முட்டி அதிர்ந்தது. அப்துல்காதரின் காதுகள் வெடித்துவிடாத குறை. அதனைத் தொடர்ந்து. 'ஐ....ய்....யோ...! அ.....ம்..... மா..." என்று காசீம் அழகு தமிழிலே அழைத்த அந்த இறுதி வார்த்தைகளும் அவருடைய காதுகளை குத்தி அழிந்தன. ஏதோ கொலை செய்துவிட்டவர் பேர்ல அப்துல்காதர் நடுங்கினார்.

அறைக்கதவை திறப்பதற்காக திறவு கோலைப் பற்றிய அவர் கை தானாகவே மறுத்து நின்றது. சந்தியில்.... இராணுவத்தினரின் வண்டி பறந்து கொண்டு சென்றது. காசீம் கதறிக் கதறிச் செத்துக் கொண்டு இருந்தான். தெய்வ நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட அறப்போருக்கு துணை நின்ற அந்தத் தமிழ் உடலைத் துப்பாக்கிக் குண்டுகள் துளை போட்டிருந்தன.

'அங்கிருந்த பெண் பிரசுகள் என்ன ஆனார்களோ...? வயோதிபர்கள்... குழந்தைகள்.... ஐ...ய்....யோ!' ஒரு குமட்டல். காசீமின் கண்கள் இமைக்குள் மறைய துடிதுடித்தன.

'ஆமிகள் வந்து உன்னை ஒரு கை பாத்தப்புறம் எல்லாம் தெரிஞ்சுக்கத்தான் போற...' என்ற அப்துல்காதரின் வன்சொற்கள் அவனுடைய காதுகளில் விஷம் பாய்ச்சின. கண்கள் ஒடுங்கிவிட்டன!

சமையல் கட்டுக்குள் நுழையும் பூனையைப் போல சுடுகாடாக உறங்கிக் கொண்டிருந்த அந்த ஐந்து சந்தியைத் தாண்டி வந்தார் அப்துல்காதர். கண்கள் புரண்டன!

காசீம் பிணமாகக் கிடந்த காட்சியை அவரால் கண்டுகளிக்க முடியவில்லை. அந்தத் துப்பாக்கிக் குண்டுகளில் ஒன்று பட்டோ என்னவோ பக்கத்து வேலி பூவரசு மரத்தில் இருந்து காகம் ஒன்று கரைந்து கொண்டிருந்தது.

சாதாரண கரைவா அது?

குதறல்...! பிரிவைக் கண்டு துடிக்கும் உள்ளத்தின் குமுறல்... அப்துல்காதர் திருப்பிப் பார்த்தார்! வேலியின் ஓரத்திலே வேறொரு காகம் செத்துக் கிடந்தது. ஏடு எடுத்தும் படியாமல் கேள்வியால் அறியாமல்.... ஏதோ நீதிகளை எல்லாம் புகட்டும் அந்த இரு காக்கைகளையும் மாறி மாறிப் பார்த்தார் அப்துல்காதர். பின் - காசீமையும் பார்த்தார்...!

அவரையும் அறியாமல் என்றுமே கலங்காத அவருடைய குழி விழுந்த கண்களிலிருந்து. இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் மல்கி, காசீமின் உடல்மீது விழுந்து தெறித்தன! அந்தக் கண்ணீர்த் துளிகள் உரிமைக்காகப் போராடிய அவன் உள்ளக் குமுறலை, கொந்தளிப்பை, இனிமேல்தான் தமிழைக் காக்க தியாகிகள் தோன்றப் போகிறார்கள் என்று கூறத் தணித்தனவா?

அறத்தினால் வீழ்ந்தவர்களின் எண்ணத்திற்குச் சாவுமணி அடித்தனவா? அப்துல்காதருடைய கண்களிலிருந்து மென்மேலும் நீர் சுரந்து கொண்டிருந்தமை எதையோ ஒன்றை உண்மையெனக் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## உண்மையாவந்தால்தாங்கமாட்டியள்

ஆமி வேலையைவிட்டிட்டுப் போய் சோதிடம் படிச்சிருக்கிறார் மேஜர் ஜெனரல் கமால் குணரத்னா. அவர் ஒரு புதுச் சாத்திரம் சொல்லி இருக்கிறார். 2025 ஆம் ஆண்டு திரும்பவும் புலி வருமாம்.

எவ்வளவுக்கு எவ்வளவு துவேஷத்தைக் கக்கேலுமோ அவ்வுளவு கக்கிறாங்கள். அரசியல் சீர்திருத்தம் எண்ட போர்வையிலை புதிய அரசியல் அமைப்பை கொண்டு வந்தால் புலி வருமாம். தாங்கள் முதல் கஸ்டப்பட்டு பயங்கரவாதத்தை இந்த நாட்டிலை இருந்து அழிச்சவையாம். அழிச்சாப் பிறகு பாத்தால் இப்ப வந்திருக்கிற அரசாங்கம் இராணுவத்தின்ரை சக்தியைச் சீர் குலைச்சு அவையின்ரை நம்பிக்கையைப் பாழாக்கிப் போடும்போலை கிடக்காம். அப்பிடி இப்பத்தைய அரசு பொறுப்பில்லாமல் ஏதேனும் செய்தால் புலி திரும்பியும் 2025 இலை வரேக்கை 2009 இலை எடுத்த தீர்மானத்தைப் போல தீர்மானம் எடுக்க 100 தடவை யோசிக்க வேணுமாம். அதாலை 2025 இலை புலி வந்தாப்பிறகு எடுக்கவேண்டிய முடிவை இண்டைக்கே எடுங்கோவன் எண்டு கமல் சொல்லவாறாரோ தெரியாது.

அதோடை கமால் என்ன சொல்லுறார் எண்டால்.......

அண்டைக்கு முப்பது வருசத்துக்கு மேலை சண்டைபிடிச்ச புலியளாலை எடுக்கேலாத உரிமையை இப்ப இருக்கிறவை மக்கள் விடுதலை முன்னணியின்ரை உதவியோடை புதிய அரசியலமைப்பு எண்டும் 20ஆவது சீர்திருத்தம் எண்டும் செய்து குடுக்க வெளிக்கிடினம். அதோடை பச்சைப் புலியள் எண்டு நாங்கள் பிடிச்சவையளை இப்ப அரசியல் கைதியள் எண்டு முத்திரை குத்தி வெளியிலை விடப்பாக்கினம். அப்பிடி அவையளை வெளியிலை விட்டிட்டு எங்களைப் பிடிச்சுப் போர்க் குற்ற விசாரணை எண்ட பேரிலை உள்ளுக்கை வைக்கப் பாக்கினம். அப்ப அவை வெளியிலை வந்து நாங்கள் உள்ளுக்கை போய் ... எண்டதை ஒரு முறை யோசிச்சுப் பாருங்கோவன். என்ன நடக்கு மெண்டு. நான் விசர்க்கதை பேசிறனெண்டு பாக்கேலாமல்.. வடிவா யோசியுங்கோ. இதை நான் பொன்னம்மாக்காக்கும், அன்னலட்சுமியக்காவுக்கம் சொல்லேல்லை குசுமாவதிக்கும், லிலாவதிக்கும் சொல்லுறன்.

இதை இந்த அம்பாறை மண்ணிலை வைச்சு ஏன் சொல்லுறன் எண்டு நினைக்கிறியள்? நீங்கள்தான் போடறிலை இருக்கிறனியள். உங்களுக்குத்தான் அதின்ரை முக்கியத்துவம் விளங்கும். அதோடை உங்களுக்குத்தான் இதயமும் இறுகிப்போனதாச் சரித்திரம் இருக்கு.

இப்ப மேஜர் ஜெனரல் கமால் குணரத்னாவைப்போல கனபேர் சாஸ்திரம் சொல்ல வெளிக்கிட்டிட்டினம்., உண்மையான சாஸ்திரியளும் சாத்திரம் சொல்லினம். பொய் சாத்திரியளும் சாத்திரம் சொல்லினம். ஒரு அரசியலைச் செய்யிறதுக்காக இல்லாட்டி அந்த நேரத்திலை தாங்கள் ஒரு கதாநாயக ரூபத்தை எடுக்க வேண்டி உப்பிடி விசர்கதையைக் கதைச்சுப் போட்டுப் போற மேவின் சில்வா மாதிரியான ஆக்களாலை தமிழ் சனத்துக்கு மட்டுமில்லை சிங்கள, முஸ்லிம் சனத்துக்கும் பிரச்சினைதான்.

இப்ப இந்த நாட்டிலை சிங்களச் சனத்துக்கு ஒரு பிரச்சினை இல்லை. தமிழ் சனத்துக்கும் ஒரு பிரச்சினை இல்லை. அரசியல்வாதியளுக்குத்தான் பிரச்சினை. கடத்தல் காரருக்கும், குடுக்காரருக்கும், கொலை கொள்ளைக் கும்பலுக்கும்தான் புலி பூனை பற்றிய எண்ணம். இந்தா புலி வருகுது.. இந்தா பூனை வருகுது எண்டு சும்மா பீத்தப்படாது. அது உண்மையா வந்தால் தாங்க மாட்டியள்....!!

தங்கடை தங்கடை சுய நலத்துக்காகப் புலி புலி எண்டு கத்திற கூட்டத்தின்ரை திருகுதாளத்தை ஆரிட்டைச் சொல்லி அழ?

கோளரங்கன்

# அம்மாக்கள் இறப்பதில்லை

கடந்தசில மாதங்களுக்கு முன்புதான்
முன்நிலவு மறைந்து
கறுக்கத் தொடங்கிய முன்னிரவொன்றில்
கதைத்துக் கதைத்துக்கொண்டே
கதையை நிறுத்திக்கொண்டாள்.

சாகிற வயதில்லாதபோதும்
செத்துப் போயிருந்தாள்

விறாந்தையில் இருந்தபடியே
வெளியே
வெறித்துக்கொண்டிருக்கிறேன்.

அதோ அந்த
காற்றில் அடிபடும் கதவினை
கவனமாக சாத்தியபடியும்...

தாறுமாறாக
கீழேகிடந்த பொருட்களை
சரிவர அடுக்கிக்கொண்டும்...

கழற்றிப் போட்ட எனது
உடுப்புக்களோடு
உள்ளாடைகளையும் சேர்த்து
கழுவிக் காயப்போட்டுக்கொண்டும்
காய்ந்த உடுப்புக்களை
கொழுவியில் கொளுவியபடியும்...

அதோ... அதோ...
கடைசி அறையின்
கண்ணாடிக்கு முன்பு
கோயிலுக்கு வெளிக்கிடுகிற
தங்கையின் ஜடையை
வாரிக் கட்டியபடியும்...

திரணை திரணையாக
உருட்டிய சோற்றுருண்டைகளின்
இறுதிக் கவளத்திலும்...

வரவேற்பறையின்
தலைக்குமேலான உயரத்தில்
கொளுவி மாட்டிய படத்தில்
உயிர்ப்பான சிரிப்போடும்...

உப்புக் காற்றோடு
அள்ளுண்டுவந்த புழுதிமாதிரி
ஆங்காங்கே ஆங்காங்கே
திட்டுத்திட்டாய் ஒட்டியபடியே
ஊரலிப்பாய் கசிந்துகொண்டிருக்கிற
நினைவுகளிலும்...

ஜன்னலூடே அடித்த காற்றில்
பறந்தபடி வந்து
என்முன் விழுந்த
இறப்புச் சான்றிதழில்
இறந்தவர் பெயருக்கு நேரேயும்...
அம்மா!



- வ.வடிவழகையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

37

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

போராளிகளைப் பொறுத்தவரையில் களநிலை முன்னெப்பொழுதையும் விட மிகவும் நெருக்கடி மிக்கதாகவே அமைந்திருந்தன. முள்ளிக்குளம், பெரியபண்டிவிரிச்சான், பரப்புக்கடந்தான், அடம்பன் என நாலு பக்கங்களிலும் பெரும் இராணுவப் படையணிகள் இறக்கி விடப்பட்டிருந்தன. எறிகணைகள் மழை போல் பொழிந்து கொண்டிருந்தன. குறிப்பாக எறிகணைகள் போராளிகளின் விநியோகப் பாதைகளில் தொடர்ச்சியாக விழுந்து கொண்டிருந்தன. கிபிர் விமானங்களும் விமான எதிர்ப்புப் பீரங்கிகளின் தாக்குதல்கள் மத்தியிலும் அடிக்கடி வந்து குண்டுகளைத் தள்ளிக் கொண்டிருந்தன.

எங்கும் பெரும் கரும்புகை மண்டலங்கள் எழுந்து கொண்டிருந்தன. சிவம் படையினரை ஒரு அங்குலம்கூட முன்னேற விடுவதில்லை என்ற உறுதியுடன் தனது அணியை வழிநடத்திக் கொண்டிருந்தான். பெண்கள் அணியினரும் சிவத்தின் கட்டளைகளுக்கு ஏற்ப மூர்க்கமாகப் போராடிக் கொண்டிருந்தனர். கட்டளைப் பீடத்திலிருந்து கட்டளைகளும் தகவல்களும் வந்துகொண்டிருந்தன. காலை பத்து மணி வரை நிலைமை போராளிகள் பக்கம் சாதகமாகவே இருந்தது.

வீரச்சாவடைவோர், காயமடைவோரின் எண்ணிக்கை ஒன்று இரண்டிலிருந்து பத்து பதினைந்து என அதிகரிக்க ஆரம்பித்து விட்டது. சிவம் இயன்றவரை பாதுகாப்பாகப் போரிடும்படி போராளிகளுக்குக் கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்தான். முன்பெல்லாம் படையினர் பத்து பதினைந்து பேர் மரணமடைந்துவிட்டாலோ காயப்பட்டுவிட்டாலோ பின்வாங்கி விடுவதுண்டு. அன்று இறந்தவர்களின் உடலைக் குறுக்கே போட்டு அதன் பின்னால் படுத்துக்கொண்டு சுட்டுக் கொண்டிருந்தனர்.

அவர்களின் தலையை இலக்கு வைத்துப் பாயும் போராளிகளின் ரவைகள் அவர்களின் தலைக் கவசங்களில் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தன. எனினும் போராளிகளின் சூடுகள் அவர்களின் இறப்பையும் அதிகரிக்கத்தான் செய்தன. காலை பதினொரு மணியளவில் படையினரின் தாக்குதல் எதிர்பாராத விதமாகத் திடீரென நிறுத்தப்பட்டுவிட்டது. எதிர்த்திசையில் ஒரு படையினரைக் கூடக் காண முடியவில்லை. எறிகணை வீச்சுக்களும் விமானத் தாக்குதல்களும்கூட நிறுத்தப்பட்டுவிட்டன.

எனினும் சிவம் தனது அணியினரை மிகவும் விழிப்புடனிருக்கும்படி கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்தான்.



முள்ளிக்குளத்தில் பெரும் படையணி குவிக்கப்படுவதாகவும் அந்தப் பக்கம் பிரதான களமாக மாறலாம் எனவும் பெரிய பண்டி விரிச்சானிலும் பரப்புக்கடந்தானி லும் படையினர் திசை திருப்பும் சண்டைகளில் ஈடுபடலாம் எனவும் கட்டளைப் பீடத்திலிருந்து அறிவித்தல் வந்தது. சிவம் தனது அணியில் ஒரு பகுதியை முள்ளிக்குளம் களமுனைக்கு அனுப்புவதற்கு அனுமதி கேட்ட போது அது மறுக்கப்பட்டு விட்டது. மாறாக பெண்கள் பிரிவில் கீதாவின் அணியை அனுப்பும்படி கட்டளை வந்தது.

கீதாவும் ஆனையிறவுச் சமரின்போது குடாநாட்டுப் பக்கத்தால் உள்ளிறங்கிய அணியை வழிநடத்திய அனுபவம் பெற்றிருந்தவள். பல சண்டைகளில் சாதனை ஈட்டி தலைவரின் விருதையும் பெற்றவள். ஆனால், காடுகளும் முட்புதர்களும் நிறைந்த முள்ளிக்குளம், கீரிசுட்டான் களமுனைக்கு அவள் பொருத்தமானவளா என்பது சிவத்திடம் கேள்வியாகவே எழுந்து நின்றது. எனினும் தலைமையின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதால் அவளின் அணியை உடனடியாகவே அனுப்பிவைத்தான்.

அதேவேளையில் எல்லாக் களமுனைகளிலும் தான் நிற்கவேண்டும் என்ற தனது பேராசையும் நியாயமற்றது என்பதைப் புரிந்து கொண்டான். கட்டளைப் பீடத்தின் வியூகங்கள் எப்போதும் நன்கு திட்டமிட்ட வகையிலேயே அமைந்திருக்கும் என்பதில் அவனுக்கு எப்போதுமே நம்பிக்கையுண்டு. சண்டை ஓய்ந்திருந்த வேளையில் மலையவன் சிவத்திடம் வந்தான்.

அவனின் தோளில் ஒரு சிறுகாயம் பட்டிருந்தது. அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. அவன் அதற்கு மருந்திட்டு கட்டுப் போட்டு விட்டுத் தொடர்ந்து சண்டையில் ஈடுபட்டான். அன்று அவன் பல படையினரைக் கொன்று குவித்த மகிழ்ச்சி அவனின் முகத்தில் தெரிந்தது.

"என்ன... மலையவன் இண்டைக்கு விளாசி எறிஞ்சிருக்கிறியள் போல..." எனக் கேட்டான் சிவம்.

"பின்னை, என்ரை தங்கச்சியை என்னைக் கொண்டே சுட வைச் சவங்களை...", என்றுவிட்டு வசனத்தை முடிக்காமலேயே பல்லை நெருமினான் மலையவன்.

"உன்ரை கோபம் நியாயமானது. ஆனால் நாங்கள் போராளிகள். நாங்கள் தனிப்பட்ட கோபங்களுக்காகப் பழி வாங்கிறதில்லை. வதனிக்கு நடந்தது எங்கடை இனத்துக்கு நடத்தப்படுகிற கொடுமையின்ரை ஒரு பகுதிதான். ஒட்டுமொத்தக் கொடுமைகளையும் இல்லாமல் செய்யத்தான் எங்கட போராட்டம்"

'ஓமண்ணை... அது சரிதான்.", என மலையவனும் ஆமோதித்தான். அவனும் ஏற்கனவே அதை உணர்ந்திருந்தான். ஆனால் வதனியின் வீரச்சாவை எண்ணும் போது அவனால் கொதிப்படையாமல் இருக்க முடியவில்லை.

'டேய்.. மலையாண்டியண்ணா", என்ற அவளின் அழைப்பு அடிக்கடி அவனின் காதில் கேட்டுக்கொண்டேயிருந்தது.

"சரி... சாப்பிட்டீங்களே?", எனக் கேட்டான் சிவம்.

"ஓமண்ணை... இப்பதான். அவிச்ச கடலை கொண்டு வந்தாங்கள். ஒரு மாதிரிச் சாப்பிட்டம்", என்றான் மலையவன் சிரித்தவாறே.

"அவங்களும் என்னதான் செய்றது. வாற வழியெல்லாம் ஒரே ஷெல்லடி", என்றான் சிவம். அப்போதுதான் தான் சாப்பிடவில்லை என்ற ஞாபகம் சிவத்துக்கு வந்தது. சாப்பாடு வைக்கப்பட்டிருந்த பதுங்குகுழியை நோக்கிப் போனான் அவன்.

ஷெல்லடியும், கிபிரடியும் முடிந்து சிறிது நேரத்திலேயே பெரியமடுவில் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் அவ் விடத்தை விட்டுப் புறப்பட ஆரம்பித்து விட்டனர். அந்த அகலம் குறைந்த சிறு வீதி மக்களால் நிறைந்துவிட்டது. எங்கு போகிறோம் என்ற முடிவு நகர்ந்து கொண்டிருந்த எந்த ஒரு மக்களிடமும் இருக்கவில்லை. அவர்கள் நினைவில் நின்றதெல்லாம் குளத்தின் அலைகரையில் விழுந்த விமானக் குண்டும் உடல் சிதறிச் செத்துப் போயிருந்த மாடுகளும்தான்.

அவர்கள் தங்கள் சொந்த இடங்களில் இருந்தபோது பாதுகாப்பான பதுங்குகுழிகளை அமைத்திருந்தனர். ஒரு சில நாட்களில் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட முடியும் என்ற நம்பிக்கையில், எவரும் அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யவில்லை. கிபிர் விமானம் குண்டுகளைத் தள்ளிய போதெல்லாம் பிள்ளையாரையும் மடுமாதாவையும் அலறி அழைத்தவாறே நிலத்தில் விழுந்து படுப்பதைவிட வேறு வழியிருக்கவில்லை. ஊருக்குள் குண்டு எதுவும் விழாத போதிலும்கூட அவர்களால் அச்சமடையாமல் இருக்க முடியவில்லை. சோர்ந்து போன மனதுடனும், தளர்வடைந்த உடலுடனும் முருகேசர் பரமசிவத்திடம் வந்தார்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் உதிக்கவில்லை

- ரூபன்



குழந்தை ம. சண்முகலிங்கம் எழுதி தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் மேடையேற்றப் பட்ட 'எந்தையும் தாயும்' நாடகத்தின் சிங்கள வடிவம், 'ஹிரு நொநகே' (சூரியன் உதிக்கவில்லை) என்னும் பெயரில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அரங்க விழாவில், ஜூலை 21 ஆம் திகதியன்று மேடையேற்றப்பட்டது! 'பராக்கிரம நிரியெல்ல'வைத் தலைவராகக் கொண்டு செயற்படும் 'ஜனகரலிய' என்னும் நாடக அமைப்பே, இதனை அளிக்கை செய்தது.

பதினொரு பிள்ளைகள் வெளிநாட்டில் இருக்கும்போது, தொண்ணூறுகளின் யுத்தகால நெருக்கடிச் சூழலில் இங்கு தனிமையில் வசிக்கும் சங்கரப்பிள்ளை என்ற - மலாயன் பென்சனியரான - முதியவரின் ஏக்கங்களும் துயரமுமே, நாடகத்தின் மையப் பொருள். அயலவரான ஐயாத்துரைதான் நாளாந்தம் அவருக்குத் துணையாக இருக்கிறார். அயல்வீட்டில் வசிக்கும் செல்வநாயகம் குடும்பத்தின் நிலைமைகளும் சொல்லப்படுகின்றன.

பிள்ளைகளை நினைந்து முதியவர் ஏங்குகிறார்; கடிதம் வருவதை எதிர்பார்த்து ஒவ்வொருநாளும் தபால்காரனை ஆவலோடு எதிர்பார்க்கிறார். சைக்கிள் சத்தம் கேட்டதும் கடிதம் வருமெனவே நம்புகிறார்; ஆனால் பாதை மூடுண்டு இடைக்கிடை மட்டும் நடைபெறும் கப்பல் போக்குவரத்தில், கடிதங்களோ பொருள்களோ அடிக்கடி கிடைப்பதில்லை. பக்கத்து வீட்டு இளைஞன் கண்ணன் வரும்போது, தனது மகன் மோகன்தான் வந்துள்ளான் என முதியவர் நம்பி ஏமாறுகிறார்.

வெளிநாட்டிலுள்ள மகனுடனும் மகளுடனும் கதைப்பதற்கு, அயல் வீட்டு செல்வநாயகம் கப்பல் ஏறிக் கொழும்பு சென்றே, பிள்ளைகளுடன் அரை மணித்தியாலம் கதைக்க முடிந்தது. அப்படிச் சிறுநேரம் கதைத்ததையே சொல்லிச் சொல்லி ஆறுதல் அடைகிறார். அதைக்கேட்டு அவ்வாறே அவரின் மனைவியும். வெளியே போகக் கார் கொண்டுவரும்படி சங்கரப்பிள்ளை கேட்க, 'ஐயா! பெற்றோல் இரண்டாயிரம் ரூபா - காருக்கு எங்கே போவது?' என்று ஐயாத்துரை பதில் சொல்கிறார்.

திடீரென உலங்குவானூர்தியின் சத்தம் பெரிதாக இரைந்துவர, பங்கருக்குப் போகும்படி பக்கத்து வீட்டார் பதற்றத்துடன் எழுப்பும் ஒலி! கடைசியாகக் கிடைத்த மகனின் கடிதத்தைத் திருப்பித் திருப்பி செல்வநாயகமும் மனைவியும் வாசித்து ஆறுதல் கொள்கின்றனர். கடிதம் வாசிக்கையில் மகனின் உருவம் மேடையின் ஒருபுறம் தோன்றி, யுத்தம் நடைபெறுவது பற்றிய அச்சத்தையும்,

(18ஆம் பக்கம் பார்க்க)





உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர், **புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

# ஆன்மாவின் யாத்திரை

- பவனீதா லோகநாதன்

ஆன்மீகம் என்பது உள்ளார்ந்த ரீதியாக உணரப்படும் அமைதிநிலை. சிலை வழிபாடுகள், சடங்குகள், மதபோதனைகள் என்பன ஆன்மீகம் அல்ல. மதங்கள் என்ற பெயரில் சொல்லப்பட்ட விதிமுறைகளின்படி இயங்குகையில் ஆன்மீக அனுபவம் நிகழ்வதில்லை. நம் எண்ணங்களினால் செயல்களில் வெளிப்படும் அமைதியே நமக்குள் நிலவும் ஆன்மீகத்தைப் புலப்படுத்தும். அத்தகைய ஆன்மீக யாத்திரையில் உணர்த்தப்படும் நம்பிக்கை ஒளியை திரையில் வெளிப்படுத்திய ஆவணப்படம் தான் Paths of the Soul.




திபெத் நாட்டின் சிறியதொரு கிராமத்தை சேர்ந்த சிலர், தலைநகரிலுள்ள Lhasaவுக்கு, 1200 மைல்கள் தரையில் வீழ்ந்து வணங்கியபடியே நடைப்பயணமாக மேற்கொள்ளும் ஆன்மீக யாத்திரையூடாக, அவர்களது அன்பு, பொறுமை, அமைதி, வாழ்வியல் அணுகுமுறை என்பவற்றில் வெளிப்படுத்தப்படும் ஆன்மீக உணர்வை இந்த ஆவணப்படம் பதிவு செய்கின்றது.

இந்தப் பயணத்தை மேற்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுபட்ட தேவையும் காரணமும் இருக்கின்றது. குடும்பத்தின் தீவினைகள் நீங்க, விலங்குகளைக் கொன்ற பாவம் தீர்க்க, வாழ்வில் இறுதி அமைதியை நோக்கி என்று பல எண்ணப்பாடுகளுடன் ஒன்றாகப் பயணிக்கும் இவர்களது பலவருட பயணத்தின் வழியாக வாழ்க்கையின் உள்ளொளி புலப்படுத்தப்பட்டு படம் பார்க்கும் நமக்கு ஒரு அற்புதமான ஆன்மீக அனுபவத்தை ஏற்படுத்துகின்றது.

இவர்களின் ஆன்மீக யாத்திரை வெறும் நடைப்பயணமாக இல்லாது, இரண்டு அடிகள் எடுத்து வைத்து அஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து வணங்கி, மீண்டும் எழுந்து இரண்டு அடிகள் நடந்து தரையில் வீழ்ந்து வணங்குதல் வேண்டும். இவ்வாறு 1200 மைல் தூரத்தை பல வருடங்களாக பனி, வெயில் பார்க்காது கடப்பது சாதாரண செயல் அல்ல. அளவில்லா பொறுமை வேண்டும். பயணத்தில் பல தடைகள் வருகின்றன, பாதைகள் சீரற்று இருத்தல், பிற வாகனங்களினால் தாமதம் ஏற்படுதல் என்று எத்தனையோ தடைகள் வந்தாலும் அவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் யாத்திரையைத் தொடர்ந்து செல்கின்றனர்.

பயணிகளில் ஒரு பெண் கர்ப்பிணியாகப் பயணத்தை ஆரம்பித்து, பயணத்தின் நடுவே குழந்தை பிறந்து, குழந்தை வளர்ந்த பின்னர்தான் அவர்களது பயணம் பூர்த்தியடைகின்றது. இலக்கின் மீதான நம்பிக்கையும் தன்னலமற்ற அன்பும் உள்ளார்ந்த அமைதியும் வாழ்வில்

(18ஆம் பக்கம் பார்க்க)

## சிறகுகள்



வானத்திலிருந்து
உதிர்கின்றன மானுடச் சிறகுகள்.

பறவைகள்
தம் சிற்றலகுகளால் கோதுகையில்
கழன்று காற்றிலலைந்து
வீழ்கின்றன
சிறகுகள்.

காலங்கடந்த பின்
பயனற்றுதிர்கின்றன இலைகள்
என்று ஏளன வார்த்தையாட
அறிவுள்ள உன்னால் முடிகிறதா?
என்னால்
முடியவேயில்லை
பசளை பற்றிய நினைப்பு.

கற்பனையில்
சிறகு விரித்த மானுடனின்
உக்கியும்
இற்றும் நைந்தும்
உதிர்கின்ற சிறகுகளால்
யாது பயன்?
எப்போதாயினும் ஏதும்
யோசித்ததுண்டா?

முடிவேயில்லை.
கேள்விகள் மட்டும் புதிதாய்
புதியதாய் எழுகின்றன.
தேடியலைகின்றன எங்கும்
பதில்களை.

சிந்துண்டிருக்கும் சிறகுகளும்
பதில் தேடியலையும் கேள்விகளும்
உண்மையில்
யாருடையவை?

- கை.சரவணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீதியின் முன்னுதாரணம்

பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம் 23

'உங்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டது. தீர்ப்பை அறிவிக்கும் வரையில் பக்கத்தில் உள்ள அறையில் அமர்ந்திருங்கள்" - என்று நீதிபதி மைக்கல் டி குன்ஹா அறிவித்தபோது, மனதளவில் நொறுங்கிப் போனார் ஜெயலலிதா. ஒரு மாநில முதல்வரின் அத்தனை அதிகாரங்களையும் ஒடுக்கி, அவரைக் குற்றவாளி என அறிவித்தார் குன்ஹா.

தீர்ப்பு வெளிவந்து மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. இப்போது ஜெயலலிதாவும் இல்லை. அவர் அரும்பாடுபட்டு வளர்த்த இரட்டை இலையும் இல்லை. போயர்ஸ் கார்டனின் இரக்சியங்களைப்போல, அவரது மரணமும் மர்மமாகவே முடிந்துவிட்டது. என்ன நடந்தது என்பது பெரும் புதிராகவே உள்ளது. கொலை என்கின்றனர் ஒரு சாரார். இல்லை இயற்கை மரணம்தான் என்கின்றனர் சசிகலா பிரிவினர். காற்றுக்கூடத் தன்னைக் கேட்டே நுழையலாம் என்ற கட்டுப்பாட்டோடு ஏறுநடைபோட்டு அனைவரையும் குனிந்தபடியே தன்னை எதிர் கொள்ளச் செய்த ஜெயலலிதா வஞ்சகத்தினால் அடக்கப்பட்டுவிட்ட செய்தியால் பலரும் கலங்கி நின்றனர். பாவம் என்ற அடிப்படையிலேயே பலரும் அவருக்காகக் கண்கலங்கினர்.

**"'நீதிபதிகள் பாரபட்சமின்றி, விதிப்படி கடமையைச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மக்களின் நம்பிக்கையைப் பெறுவார்கள்' என்ற அர்த்த சாஸ்திர வரிகளை மைக்கல் டி குன்ஹா நன்றாக அறிந்து வைத்திருக்கிறார் போலும். உண்மையும் - நீதியும் - நேர்மையும் என்றும் காலத்தால் அழிவதில்லை என்பதற்கு இந்தியாவில் ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்கில் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பும் நல்ல எடுத்துக்காட்டு. நீதிபதி மைக்கல் டி குன்ஹா முன்னுதாரணமாக்கப்பட வேண்டிய ஒருவர்."**





2014 செப்ரெம்பர் 27 அன்று வரலாற்றுத் தீர்ப்பு எழுதிய மைக்கல் டி குன்ஹா, என்ன செய்து கொண்டிருக்கிறார்? கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதியாக, தனது சட்டப் பணியைக் கவனித்துக்கொண்டு வருகிறார் அவர்.

அண்மையில், அவருடைய நெருங்கிய நண்பர்கள் கலந்துகொண்ட விழாவில், 'ஜெயலலிதா வழக்கின் தீர்ப்புப் பற்றி நினைத்துப் பார்த்தது உண்டா?' என ஒருவர் கேள்வி எழுப்பியபோது, 'நான் ஓர் அரசாங்க ஊழியன். சட்டம் என்ன சொன்னதோ அதை மட்டுமே செய்தேன். மற்ற வழக்குகளைப் போலவேதான் அந்த வழக்கையும் பார்த்தேன். தீர்ப்பு வழங்கியதோடு என்னுடைய பணி முடிந்து விட்டது. எந்தவித தனிப்பட்ட விருப்பு வெறுப்பையும் அந்த வழக்கில் நான் காட்டவில்லை" என இயல்பாகப் பேசியிருக்கிறார்.

'இதுதான் குன்ஹாவின் வழக்கம்' என்கிறார்கள் அவருடைய நண்பர்கள்.

இதே சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவை விடுதலை செய்த நீதிபதி குமாரசாமியையும் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. கார்டனை விட்டு ஜெயலலிதா வெளியில் வர இந்தத் தீர்ப்பு ஒரு காரணமாக அமைந்தது. அதேநேரம், 'குமாரசாமி கல்குலேட்டர்' என விமர்சிக்கும் அளவுக்குக் கெட்ட பெயர் சம்பாதித்தார்.

'இப்போது என்ன செய்கிறார் குமாரசாமி?'

"சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு விடுதலை என தீர்ப்பு வழங்கிய ஓர் ஆண்டிலேயே குமாரசாமி ஓய்வு பெற்றுவிட்டார்.

பொதுவாக, கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதியாக ஒருவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டால், அவரை அரசு சார்ந்த துறைகளின் விசாரணை அதிகாரியாகவோ, தனி அதிகாரியாகவோ அரசு பயன்படுத்திக் கொள்ளும். ஓய்வுக்குப் பிறகு பத்துக்கும் மேற்பட்ட அரசுத் துறைகளில் பணியாற்ற விருப்பக் கடிதம் கொடுத்தார் குமாரசாமி. அந்தக் கடிதங்களைக் கிடப்பில் போட்டுவிட்டது கர்நாடக அரசு.

அவருக்குப் பிறகு ஓய்வுபெற்ற நீதியரசர் சந்திரசேகர். ஜெயலலிதாவுக்கு ஜாமீன் மறுத்த நீதிபதி இவர். அவரைக் கர்நாடக அரசு. பல்வேறு அரசுத் துறைகளில் பயன்படுத்திக் கொண்டது. இதனால் மனம் நொந்து போன குமாரசாமி, மத்திய அரசின் ரயில்வே வாரியத்தின் (Accident claim) பணிக்கு விண்ணப்பித்தார். இந்த விண்ணப்பத்தையும் மத்திய அரசு நிராகரித்து விட்டது.


மீண்டும் கர்நாடக அரசின் நிர்வாகம் கிரிமினல் (Criminal Justice Administration) என்ற பதவிக்கும் விண்ணப்பித்தார். அந்தப் பதவியையும் சந்திரசேகருக்கு அளித்துவிட்டு, குமாரசாமியைக் குப்புறத்தள்ளியது அரசாங்கம். ஒரே ஒரு தீர்ப்புக்காக ஒருவர் கொண்டாடப்படுகிறார். மற்றவர் நிராகரிக்கப்படுகிறார்.

**இது போன்று பல அதிரடியான தீர்ப்புக்களை வழங்கி நீதித்துறைக்கு ஒரு புதிய போக்கைக் காட்டியவர் நீதிபதி இளஞ்செழியன். அவரின் காலத்தைச் சிபிச் சக்கரவர்த்தியின் காலம் என நான் எண்ணுவதும் உண்டு. நீதிபதி மைக்கல் டி குன்ஹாவைப் போன்று அவரும் முன்னுதாரணமாக்கப்பட வேண்டியவர்.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







ஜெயலலிதாவின் வரலாற்றை படமாக எடுத்தால் அதில் நடிக்கத் தயார் எனக் கூறியுள்ளார் த்ரிஷா. மோகினி படம் வெளியான பின் ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

டக்குட்டி சிங்கம்' வெற்றியைத் தொடர்ந்து படத்தில் நடிக்கிறார் கார்த்தி.
கோடி இந்திய ரூபா செலவில் உருவாகும் படத்தில் அவருக்கு ஜோடியாக ராகுல் ப்ரீத் க்கிறார்.
பாது படக்குழு படப்பிடிப்புக்காக உக்ரைன் ள்ளது. டிசம்பரில் படத்தை வெளியிடவும் டப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கவர்ச்சிப் புயல் எனப் புகழப்படுபவர் பிரியங்கா சோப்ரா. பாடகர் நிக்ஜோன்ஸை தீவிரமாகக் காதலித்து வந்தார்.
இருவரும் விரைவில் திருமணம் செய்யவுள்ளனர் என செய்திகள் பரவியிருந்தன. இந்நிலையில் இருவரின் திருமண நிச்சயதார்த்தம் வோஸிங்ரனில் நடந்ததாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

'குயின்' படத்தின் மீளுருவாக்கப் படமான 'பரீஸ் பரீஸ்' படம் முழுமையாக நிறைவடைந்துவிட்டது.
காஜல் அகர்வால் நடித்துள்ள இந்தப் படத்தை ஒக்ரோபர் மாதம் வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.
தமிழ் தவிர மலையாளம், கன்னடம், தெலுங்கிலும் மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ள இந்தப் படங்கள் ஒரேநாளில் வெளியாகும் எனத் தெரிகிறது.





பொலிவூட்டுக்கு நடிக்கச் சென்ற டாப்ஸி தென்னிந்தியப் படங்களில் நடிப்பதைத் தவிர்த்தார். தற்போது மீண்டும் தென்னிந்தியப் படங்களில் நடித்து வருகிறார்.
அவரது நெருங்கிய ஆண் நண்பர் மேதிஸ் போவுடன் டேட்டிங்கிலும் ஈடுபட்டு வந்தார். தற்போது அவரை நிச்சயதார்த்த திருமணம் செய்து கொண்டுள்ளார். திருமணம் அடுத்த ஆண்டு நடக்கும் எனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றம் வருமா?

தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக இருப்பவர் நஜாம் சேதி. கடந்த வருடம் கிரிக்கெட் சபையின் 30 ஆவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட இவரின் பதவிக்காலம் விரைவில் முடியவுள்ளது. இந்நிலையில் புதிய தலைவராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான வசீம் அக்ரம் தெரிவு செய்யப்படுவதற்கு வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகின்றது.

அதேசமயம் பாகிஸ்தானில் தற்போது நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் பாகிஸ்தானுக்கு முதல் உலகக் கிண்ணத்தைப் பெற்றுக்கொடுத்த அணித்தலைவரான இம்ரான் கானது கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. தனியே ஆட்சி அமைப்பதற்குரிய பெரும்பான்மையைக் கொண்டிருக்காவிடினும் கூட்டணி ஆட்சி மூலம் அடுத்த பிரதமராகும் வாய்ப்பு இம்ரான் கானுக்கு உறுதியாகியுள்ளது.

2009 ஆம் ஆண்டு இலங்கை அணி மீது லாகூரில் மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குதலால் ஏற்பட்ட பின்னடைவும் இந்தியாவுடனான போட்டிகள் நடைபெறாமல் போனதும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு பாரிய பொருளாதார இழப்பை ஏற்படுத்தி வருகின்றது. தற்போது இம்ரான்கானின் வருகையோடு வசீம் அக்ரத்தின் வருகையும் சாத்தியமாக காலம் கனிந்துள்ளது.

எனவே இவர்கள் இருவரும் இணைந்து பாகிஸ்தான் கிரிக்கெட்டை பெருமைப்பட வைத்ததைப் போன்று தற்போதைய நெருக்கடி நிலைக்கும் தீர்வு காண்பார்கள் என்று இரசிகர்கள் நம்புகின்றார்கள். ஆனாலும் காஷ்மீர் பிரச்சனையில் பிரதமராக இம்ரான் கான் எடுக்கும் முடிவே இந்தியத் தொடரைத் தீர்மானிக்குமெனக் கருதப்படுகின்றது.

# சட்ட நடவடிக்கை

2016 / 17 பருவகாலத்திற்கான பிறீமியர் லீக் போட்டிகளில் செல்சி அணியின் முகாமையாளராக இத்தாலியின் முன்னாள் வீரரான அன்ரனியோ கொன்ரே மூன்று வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். அந்தப் பருவகாலத்திலேயே செல்சி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியும் இருந்தது. ஆனாலும் 2017 / 18 பருவ காலத் தொடரில் செல்சியால் 5ஆவது இடத்தையே பிடிக்க முடிந்தது. இதனால் அதிருப்தியடைந்த செல்சி நிர்வாகம் அவரைப் பதவியில் இருந்து நீக்கி புதிய முகாமையாளராக தற்போது மௌரிசியோ ஷரியை நியமித்துள்ளது.



அதேசமயம் இந்தாண்டு மே மாதத்தில் றியல் மட்றிட் அணியின் முகாமையாளராக விளங்கிய சினேடின் சிடேனை நீக்கி அவரது இடத்திற்கு கொன்ரேயை நியமிக்க றியல் மட்றிட் நிர்வாகம் ஆர்வம் காட்டி இருந்தது. ஆனாலும் அப்போது செல்சி நிர்வாகம் கொன்ரே குறித்து ஒரு தீர்க்கமான முடிவை அறிவிக்கவில்லை. இதனால் றியல் மட்றிட் நிர்வாகம் அணியின் புதிய முகாமையாளராக ஜுலன் லப்ரொகியை நியமித்ததனால் அந்தவாய்ப்பும் தற்போது கொன்ரேக்கு கிடைக்கவில்லை

இதனால் பெரிதும் விரக்தி அடைந்துள்ள கொன்ரே தன்னை முகாமையாளர் பதவியில் இருந்து நீக்கியமை தனது தொழிலுக்குப் பாதிப்பையும் தனது எதிர்காலத்திற்குரிய வருமான இழப்பையும் ஏற்படுத்தியுள்ளதனால் செல்சி அணி நிர்வாகத்திற்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆனாலும் அவரது எஞ்சிய காலப்பகுதிக்கு 9 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்டுகள் வழங்கப்பட்டதாகவும் அது போதுமானதாக இல்லாத காரணத்தாலேயே கொன்ரே கூடுதலான இழப்பீட்டைக் கோருவதாக ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# மீள்வருகை

இந்தியாவின் மகளிர் ரென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்ஷா தனி நபர் போட்டிகளில் பிரகாசிக்கத் தவறினா லும் இரட்டையர் போட்டி களில் விம்பிள்டன், அவுஸ்ரேலியன் ஓபன், அமெரிக்க ஓபன் தொடர் களில் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர். 2010 ஆம் ஆண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரான சொகைப் மலிக்கை திருமணம் செய்த சானியா எட்டு வருடங்களின் பின்னர் முதல் குழந்தைக்கு விரைவில் தாயாகவுள்ளார். குழந்தை பிறந்ததும் சானியா மீண்டும் ரென்னிஸ் உலகிற்கு வருவாரா? மாட்டாரா? என்ற கேள்வி சமீபத்தில் எழுந்தது.

இந்நிலையில் கடந்தவாரம் ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்த சானியா 2020 டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் தனது மீள்வருகை நிகழுமென உறுதியாகக் கூறியுள்ளார். மேலும் அவர் 'ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் போட்டிகளில் இருந்து விலகி மீண்டும் போட்டிகளில் பங்குபற்றுவதென்பது இலகுவான விடய மில்லை. அவ்வாறு வந்தாலும் முன்னர் இருந்த நிலையை அடைய அதிக காலம் பிடிக்கும். என்றாலும் கடந்த காலங்களில் குறைந்தது 20 வீராங்கனைகளாவது குழந்தை பெற்ற பின்னரும் போட்டிகளில் சிறப்பாக விளையாடியுள்ளார்கள். அதிலும் கிம்கிளிஸ்ரர்ஸ் கிராண்ட்ஸ்லாம் பட்டமே வென்றுள்ளார்.

நான் ஒரு சாதாரண குடும்பப் பெண்ணாக வாழ்க்கையைத் தொடர விரும்பவில்லை. என் குழந்தை தன்னம்பிக்கையுடனும் சுதந்திரத்துடனும் இருக்க வேண்டுமென விரும்புகிறேன். என் குழந்தைக்கு நான் முன்னுரிமையும் அளிப்பேன். ஆனாலும் அது ஒவ்வொரு நிமிடத்தையும் பெற்றோராக குழந்தைக்குச் செலவிட வேண்டுமென்று அர்த்தமில்லை' எனவும் கூறியுள்ளார்.

# ஒற்றுமையே பலம்

கடந்த பெப்ரவரி மாதம் தென்கொரியாவில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க வடகொரியா 22 வீரர்களை அனுப்பியமை விளையாட்டு அரசியல் எல்லைகளைக் கடந்து ஒற்றுமையை ஏற்படுத்தும் என்பதற்கு இதுவொரு நல்ல உதாரணமாக விளங்கியது.

இந்நிலையில் வடகொரியாவைச் சேர்ந்த தடகள வீரர்கள் மற்றும் கூடைப்பந்தாட்ட வீராங்கனைகள், பயிற்சியாளர்கள் அடங்கலான குழுவினர் பயிற்சியில் ஈடுபடுவதற்காக கடந்தவாரம் தென்கொரியாவுக்குச் சென்றுள்ளனர். ஆசியப்போட்டிகள் இந்தோனேசியாவில் இம்மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 2 வரை நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் தென் கொரியாவும் வடகொரியாவும் இணைந்து ஒரே அணியாக படகோட்டுதல் மற்றும் மகளிர் கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் விளையாடுவதற்கு முடிவுசெய்திருந்தன. அதற்கான பயிற்சியில் ஈடுபடுவதற் காகவே இந்த வருகை நிகழ்ந்துள்ளது.

முன்னதாக தென்கொரியாவைச் சேர்ந்த 50 கூடைப்பந்தாட்ட வீரர்கள் கடந்த மாதம் வடகொரியாவுக்கு சிநேகபூர்வமான போட்டிகளில் பங்கேற்கச் சென்றிருந்தார்கள். ஆசியப்போட்டிகளில் வடகொரியாவும் தென்கொரியாவும் இணைந்து போட்டிகளில் பங்குபற்றுவது இதுவே முதன்முறையாகும். அத்தோடு இருநாட்டு கொரிய வீரர்களும் தொடக்க நிகழ்விலும் இறுதி நிகழ்விலும் ஒன்றாக அணிவகுத்துச் செல்லவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 04.08.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org